# தமிழர் வாழ்ந்த விதம்

ACL-FTS
00213

8017

எழுதியவர் :
எஸ். எஸ். அருணகிரிநாதர்,
தலைமைத் தமிழாசிரியர்,
தொண்டைமண்டலம் துளுவவேளாளர் உயர்கலாசாலை, சென்னை.

8017

...லிஷிங் ஹவுஸ் லிமிடெட்
...செட்டித் தெரு, சென்னை-1.

[விலை அணா 12

முதற் பதிப்பு—1949
இரண்டாம் பதிப்பு—1950
மூன்றும் பதிப்பு—1951
நான்காம் பதிப்பு—1953

APPROVED BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
FOR CLASS USE
Vide Fort St. George Gazette, Page 111 dated 7—5—'52

நவபாரத் பிரஸ் 2/141 பிராட்வே, சென்னை-1.

# முன்னுரை

இதுவரையில், என்னால் எழுதப்பெற்றுள்ள அறுபதுக்கு மேற்பட்ட புத்தகங்களில் ஒவ்வொன்றையும் எழுதுவதற்கு யான் எடுத்துக்கொண்ட முயற்சியைப் பார்க்கினும், இப் புத்தகத்தை எழுதுவதற்கு யான் எடுத்துக் கொண்ட முயற்சி அதிகமாகும். இப் புத்தகத்தை ஒரு முறை முற்றிலும் படிப்போர் எவரும் 'இஃது அரிய உழைப்பின் பயன்' என்று கூறுவாரென்னும் நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. கல்வெட்டு, சதகங்கள், தமிழ் நாவலர் சரிதை, அபிதான சிந்தாமணி, சில தனிப் பாடல்கள், கர்ணபரம்பரைச்செய்தி, இடைக்கால இலக்கியங்கள் ஆகிய இவைகளின் துணை கொண்டு இப்புத்தகம்—"தமிழர் வாழ்ந்த விதம்" எழுதப்பெற்றிருக்கிறது.

இப்புத்தகத்தில் காணப்படும் வரலாறுகளில் உள்ள செய்திகள் ஒவ்வொன்றும், பற்பல நாட்கள் பற்பல நூல்களையும் பிறவற்றையும் ஆராய்ந்து அறியப்பெற்றவைகளாகும்: ஆங்காங்குச் சென்று சேகரித்த செய்திகளும் உண்டு. உழைப்பின் உயர்வை உணரக் கூடியவர்கள் மிகவும் அருகி இருக்கும் இக்காலத்தில், சிலரேனும், இப்புத்தகத்தின் உயர்வை உணருவார்கள் என்று நினைக்கிறேன்.

தமிழ் மக்களின் உயர்பண்பை, இப்புத்தகம் பலவகையில் விளக்குகின்றது. இப்புத்தகத்தில் குறிக்கப்பெற்றுள்ள தமிழ்ப் பெருமக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையில் சிறந்து விளங்குவதை உணரலாம், இப்புத்தகம், நம்மால் மறக்கப்பட்ட தமிழ்ப் பெரு மக்களின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியாகும். இது மாணவ மாணவியர்களுக்கு ஏற்றவாறு எழுதப் பெற்றிருக்கின்றது. இதைப்படிக்கும் மாணவ மாணவியர்களிற் சிலரேனும் நல்ல பண்பா டுடையவர்களாய் விளங்குவார்கள் என்பது என் கருத்து.

இப்புத்தகம், மாணவ மாணவிய ருலகத்திற்குப் பயன்படுத்தப் பெறுமானால், அது, யான் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு ஊக்கமளிப்பதாகும்.

எஸ். எஸ். அருணகிரிநாதர்.

## உள்ளுறை


| எண் | | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| 1. | வாக்குத் தவறாத வாய்மையாளர் | .... | 1 |
| 2. | அறம் வளர்த்த அண்ணல் | .... | 15 |
| 3. | புலவர் மனம் | .... | 38 |
| 4. | மேழிச் செல்வம் | .... | 63 |
| 5. | நன்றி மறவா நல்லாப் பிள்ளை | .... | 65 |

# தமிழர் வாழ்ந்த விதம்

---

## 1. வாக்குத்தவறாத வாய்மையாளர்

தமிழ் நாட்டிலே, தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்ந்த தமிழர்கள், நற்செயல் பலவற்றை நாடோறும் தவறாது சிறப்புறச் செய்திருக்கின்றார்கள். தமிழ் மக்களின் நாகரிகம் தனிச் சிறப்புற்றது; மிகப்பழமையானது. தமிழ் நாட்டாரின் ஒப்புயர்வற்ற மன்னர்களாய் விளங்கிய சேர சோழ பாண்டிய மன்னர்கள் உலகத்தில் மிகவும் பழம்பெருமை வாய்ந்தவர்களாய் நல்லரசு செலுத்தி நாட்டை ஆண்டு வந்தார்கள். தங்கள் அரசாட்சியிலே அவர்கள் தங்களாலும், தங்களைச் சார்ந்தவர்களாலும், பகைவர்களாலும், கள்வர்களாலும், புலி முதலிய கொடிய வனவிலங்குகளாலும் மக்களுக்குச் சிறிதும் தீங்கு நேராவண்ணம், மக்களை, தாய் தன் அருமருந்தன்ன குழந்தைகளைப் பாதுகாப்பது போலப் பாதுகாத்து வந்தார்கள். இத்தகைய தமிழப் பேரரசர்களின் காலத்திலே தமிழ் நாடு உலகத்தில் சிறந்து விளங்கியது. கிரேக்கர்களும், ரோமர்களும் தமிழ்நாட்டினருடன் வாணிபம் நடத்தி வாழ்வு பெற்றார்கள். தமிழர்களும் கடல் கடந்து சென்று வாணிபம் செய்து தமிழ் நாட்டிலே

பொன்னையும், மணியையும் கொண்டு வந்து குவித்தார்கள். உலகமக்களில் முதன் முதல் கருங்கடலில் கலம் செலுத்திய பெருமை தமிழர்களுக்குரியதென்பது மிகையாகாது. இன்றைக்கு உலகத்தின் பலபாகங்களிலும் உள்ள மக்கள் பலரிடம் காணப்படும் உயர்ந்த பண்பாடுகளிற் சிலவேனும் தமிழர்களுடையவை என்பதும் பொய்யாகா !

தமிழகத்தை அரசாட்சி செய்த பேரரசர்களும், சிற்றரசர்களும் அறத்தினின்று சிறிதும் வழுவாது அரசாட்சி செய்தார்கள். "அரசனெவ்வழி, குடிகள் அவ்வழி" என்ற வார்த்தை உண்மை எனும்படி தமிழ்நாட்டில் வாழ்ந்த தமிழ் மக்களும் நன்னெறிவழாது வாழ்ந்து வந்தார்கள். உலகத்தில், சிறந்த முறையில் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைத் திறந்தெரிந்து உரைப்பதாகிய "திருக்குறள்" ஒன்றே தமிழர்களின் சிறந்த பண்பாட்டை விளக்கப்போதுமானது. நல்லியல் பண்புகள் அத்தனையும் பண்டைக் காலந்தொட்டே தமிழ் மக்களிடம் இருந்து வருவனவாம்.

தமிழர் பலர் தங்கள் வாழ்நாட்களில் சிறந்த பண்பாடுள்ளவர்களாய் வாழ்ந்துவந்தனர்; வாழ்ந்து வருகின்றனர். "தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களாக" இருந்த பெருமக்கள் உலகத்தின் பல பாகங்களிலும் பிறந்து வாழ்ந்தார்களென்றாலும், அத்தகைய பெருமக்கள் தமிழ் நாட்டிலே நிறைந்திருந்தார்கள் என்பது தமிழ் நூற் கடலினுள்ளும், தமிழ் நாட்டு வரலாற்றினுள்ளும் புகுந்து ஆராய்வார்க்குப் புலனாகும். வீரம், கொடை ஆகிய

இவைகளில் தமிழ் மக்கள் சிறப்புற்றிருந்தார்கள் என்பதைப் பார்க்கிலும் "தமிழர்கள் சிறந்த **பண்பாடு** வாய்ந்தவர்களாய் விளங்கினுர்கள்" என்பதே தமிழர்களுக்குப் பெரிதும் பெருமை அளிப்பதாகும். பண்பாடுமிக்க தமிழ் மக்கள் பலரின் வரலாறுகளை நாம் சங்க நூற்களின் வாயிலாகவும், பிறநூற்களின் வாயிலாகவும் நன்கு அறிவோம். நாம் நன்கு அறியாத, இலைமறை காய்போல் உள்ள பண்பாடு நிறைந்த, தமிழ்ப் பெருமக்கள் பலரின் வாழ்க்கை வரலாற்றையும் நாம் அறிந்துகொள்வது, நமக்கு, நன்மை பயக்கும் செயலாகும். ஆகவே, நாம் நம்மால் ஒருவாறு மறக்கப்பட்ட அந்தப் பெருமக்களிற் சிலரின் வரலாறுகளையேனும், இனி முடிந்த வரையில், அறிந்துகொள்ள முயற்சிப்போம். அந்த முயற்சி நமக்குச் சிறிதேனும் நலம் பயக்குமென்பது நிச்சயம்.

தமிழ் நாட்டிலே உள்ள பல ஜமீன்களிலே சேற்றூர் ஜமீன் என்பதும் ஒன்று. சேற்றூர் ஜமீன் மிகவும் பழமை வாய்ந்தது. அதற்குப் பரம்பரையாக உரியவர்களாய் இருந்த ஜமீன்தார்களில் பலர், ஈகை, வீரம் முதலியவைகளில் சிறந்தவர்களாய் இருந்தார்கள். அவ்வாறு சிறப்புற்றிருந்த சேற்றூர் ஜமின்தார்களில் சிவப்பிரகாச துரை என்பவரும் ஒருவராவர். சிவப்பிரகாச துரை, அன்பும் அருளும் நிறைந்தவராவர்; அதே சமயத்தில் பகைவர்களை அடக்குவதில் வீரராகவும் விளங்கினுர். இவைகளை விளக்க நாம் பின்வரும் இரண்டு நிகழ்ச்சிகளைக் கவனிப்போம்:

ஜமீன்தாராகவும், வீரராகவும் விளங்கிய சிவப் பிரகாசதுரைக்குத் தமிழ் இலக்கிய இலக்கணங் களிலும் நல்ல பயிற்சியும், பற்றும் உண்டு. ஆகவே, அவர், அவைகளில் நல்ல பாண்டியத்தியம் பெற்ற புலவர் பெருமக்களை அழைத்து அவர்களு டன் அளவளாவி மகிழ்தலிலும், அவர்கள் சொற் பொழிவுகளைப் பிறருடன் தாமும் இருந்து கேட்ட லிலும் பெருவிருப்புக் கொள்வார். தம்மால் விரும் பப்படுகின்ற புலவர்களுக்குச் சிவப்பிரகாச துரை, சமைக்கப்பெற்ற உணவைத் தாமே பரிமாறுவதில் பெருவிருப்புள்ளவர்; புலவர்கள் உண்டவுடன் அவசரமாக ஊருக்குப் போக வேண்டுமானால், புல வர்கள் உணவை உண்ணும்போதே, அவர்கள் பக்கத்தில் வெள்ளித்தட்டில் வெகுமதியைக் கொண்டுவந்து வைத்து விடுவார். புலவர்கள், உண வருந்தியவுடன், ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கும் வெகுமதியை எடுத்துக்கொண்டு, நன்றியறிதலுக் குரிய வார்த்தைகளைத் தெரிவித்து விட்டுத் தங் களுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் ஜமீன் பல் லக்கில் அமர்ந்து தங்கள் ஊர்போய்ச் சேருவார்கள். இப்படிச் சிவப்பிரகாசதுரை புலவர்களுக்கு உதவி செய்வது வழக்கமென்பதைப் பின்வரும் நிகழ்ச்சி யினாலும் உணரலாம்.

சிவப்பிரகாச துரையின் காலத்தில் தமிழ் நாட் டில் பல இடங்களில் கலகமும், குழப்பமும் நிறைந் திருந்தன; ஆகவே, ஜமீன்தார்களில் பலர் தங்கள் ஆதிக்கத்தைத் தங்கள் எல்லையில் நிலை நிறுத்திக் கொள்வதற்காகத் தங்களிடம் சிறு சிறு சேனைகளை

வைத்துக் கொண்டிருந்தார்கள். வேறு சில வீரர்களும், சேனுதிபதி என்னும் பெயருடன், சிறு சிறுபடைகளைத் தங்களிடம் வைத்துப் பரிபாலித்து வந்தார்கள். அந்தச் சேனுதிபதிகள் கலகக் காலத்தில் தங்களுக்கு விருப்பமான ஜமீன்தார்களுக்கு உதவி செய்து அவர்கள் கொடுக்கும் பெரும் பொருளைக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இப்படி வாழ்ந்து வந்த சேனுதிபதிகளிலே 'சொக்கம் பட்டி சேனுதிபதி பொன்னம்பலம் பிள்ளை' என்பரும் ஒருவராவர். பொன்னம்பலம் பிள்ளை வீரர் மட்டுமல்ல; சிறந்த கல்விமானுமாவார்; விரைந்துகவி இயற்றுவதிலும் வல்லவர். அவரும் சிவப்பிரகாச துரையும் நெருங்கிய நண்பர்களாய் இருந்தார்கள்.

ஒரு நாள் சிவப்பிரகாச துரை சேனுதிபதி பொன்னம்பலம் பிள்ளையுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் அவரை நோக்கி, "நண்பரே, நம்மிருவர் வசத்திலும் இருக்கும் வீரர்களின் போர்க் குணத்தைப் பின்னும் வளரச் செய்வது நல்லது. நாட்டிலே குழப்பம் ஏற்படும்போலத் தோன்றுகிறது. ஆகவே, இதைக் கூறினேன்" என்று உரைத்தார்.

"நமது வீரர்களின் போர்குணத்தை வளர்ப்பதற்குத் 'தில்லையம்பலக் கவிராயர்' தாம் தகுதி வாய்ந்தவர். உணர்ச்சி ஓங்கும்படி எந்தச் செய்திகளையும் எடுத்து இயம்புவதிலே அவர் வல்லவர். கம்பராமாயணம், கந்தபுராணம், வில்லிபாரதம், கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களில் காணப்படும் போர்ப்பகுதிகளை எடுத்துரைக்கும்படி நாம் அவரைக்

கேட்டுக்கொள்ள வேண்டும். போர்ச் செய்திகளைக் கண்ணெதிரில் நடப்பது போலவும், அச்செய் திகளைக் கேட்கும் கிழவர்களுக்கும் வீரம் உண் டாகும்படியும் பிரசங்கம் செய்வதிலே தில்லையம் பலக் கவிராயர் மிகவும் வல்லவர். தங்களுக்கு விருப்பமானால், இப்போது நான் சொல்லியபடி நடைபெறச் செய்கிறேன்'' என்று சேனாதிபதி பொன்னம்பலம் பிள்ளை விளம்பினார்.

சேனாதிபதியின் கருத்துப்படி நடப்பதற்குச் சிவப்பிரகாச துரை அனுமதி கொடுத்தார். பின் னர், சித்தன்பட்டி என்னுமூரி லிருந்த தில்லையம் பலக் கவிராயர் வரவழைக்கப்பட்டார். கவிராயர் வந்த பிறகு அவரிடம் அவர் வரவழைக்கப்பட்ட தற்குரிய செய்தி விவரமாக விளக்கப்பட்டது.

உடனே, கவிராயர், சிவப்பிரகாச துரையை யும், சேனாதிபதியையும் நோக்கி, "உங்கள் கருத்தை என்னால் முடிந்த வரையில் நிறைவேற்றுகிறேன். எனக்கு விருப்பமானதொரு வேலையைத்தான் நீங்கள் இருவரும் என்னை இயற்றும்படி சொல்லு கிறீர்கள்'' என்றார்.

அப்போது சிவப்பிரகாச துரை கவிராயரை நோக்கி, "உங்கள் திறமையில் எங்களுக்கு நம் பிக்கை உண்டு. ஆனால், எங்கள் எண்ணத்தை நீங்கள் நிறைவேற்றுமுன் எங்களுடைய வேண்டு கோளொன்றுக்கு நீங்கள் கட்டுப்படவேண்டும்'' என்றியம்பினார்.

"தங்கள் வேண்டுகோள் யாதோ?'' எனக் கேட்டார் கவிராயர்.

"எங்கள் சேனைகளுக்கு நீங்கள் உங்கள் சொற்பொழிவின் மூலம் போர்க்குணத்தை வளர்ப்பது போல, வேறிடங்களுக்குச் சென்று அவ்விடங்களில் எங்களைப் போன்ற ஜமீன்தார்களிடம் இருக்கின்ற சேனைகளுக்கும் போர்குணத்தை வளர்க்கும் சொற்பொழிவைத் தாங்கள் செய்யலாகாது. யான் தங்களைக் கேட்டுக் கொள்ளுவது இவ்வளவு தான். ஆனல், தாங்கள் வேறு வகையான சொற்பொழிவுகளைத் தங்களுக்கு விருப்பமான இடத்தில் நிகழ்த்திக் கொள்ளலாம்" என்ருர் சிவப்பிரகாச துரை.

கவிராயர் சற்று ஆலோசித்தார்; பிறகு சிவப்பிரகாச துரையின் கருத்துப்படி நடப்பதற்கு இணங்கினர்.

பின்னர், ஜமீன்தார் சொற்பொழிவுக்குரிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். ஒருவாரக் காலத்திற்குள் எல்லா ஏற்பாடுகளும் நிறைவேறின.

போர் வீரர்களுக்கிடையில், தில்லை அம்பலக் கவிராயர் ஒரு மேடைமீதமர்ந்து, இரண்டு மாதக் காலம் வரையில் நாம் மேலே குறிப்பிட்ட கம்ப ராமாயணம், வில்லிபாரதம், கந்தபுராணம், கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களில் உள்ள போர்ப் பகுதிகளைப் பற்றிக் கேட்போர் மனத்தில் வீரம் பொங்கும்படி சொற்பொழிவாற்றினர். போர் வீரர்களின் மனத்தில் பின்னும் அதிகமாக வீரம் பொங்கி எழுந்தது. தில்லை அம்பலக் கவிராயரின் வாக்கு வன்மையைப் போர் வீரர்கள் புகழ்ந்தார்கள். திறமை வாய்ந்த தில்லையம்பலக் கவிராயரை

அழைத்து வந்த சேனாதிபதி பொன்னம்பலம் பிள்ளையைச் சிவப்பிரகாச துரை மெச்சிப் புகழ்ந்தார். பின்னர், கவிராயரவர்களுக்கு, சிவப்பிரகாச துரை, வேண்டும் அளவுக்குப் பொருளுதவி செய்ததுடன் பலவிதமாகிய மரியாதைகளையும் செய்தனுப்பினார்.

சில தினங்கள் சென்றன. தில்லையம்பலக் கவிராயர் சிவப்பிரகாச துரையின் சேனைகளுக்கு போர்க்குணம் வளரும்படி சொற்பொழிவாற்றிய செய்தியைப் பலபேரறிந்தனர். அவ்வாறு அறிந்தவர்களிலே சிவகிரி ஜமீன்தாரும் ஒருவராவர். அவருக்கு, தில்லையம்பலக் கவிராயரைக் கொண்டு தாமும் தமது சேனைகளின் போர்க்குணத்தை வளர்க்க வேண்டுமென்னும் எண்ணம் உண்டாயிற்று. இதை அவர் தம்மைச் சார்ந்தவர்களிடம் தெரிவித்தார். தக்கார் பலரும் அவர் கருத்துக்கு இணங்கினார்கள். பின்னர் ஜமீன்தாரின் விருப்பப்படி, தக்கார் ஒருவர் சென்று, அரிதின் முயன்று, தில்லையம்பலக் கவிராயரைச் சிவகிரிக்கு அழைத்து வந்தார்.

சிவகிரி ஜமீன்தார் கவிராயரை அன்புடன் வரவேற்று விருந்து முதலியன நடத்தி உபசரித்தார். கவிராயர் மகிழ்ச்சியடைந்தார்.

அப்போது ஜமீன்தார், கவிராயரை நோக்கி, "ஐயா, தாங்கள் சேற்றூர் ஜமீன்தாரின் சேனைகளுக்குப் போர்க்குணம் வளரும்படி மிகத்திறமையாகச் சொற்பொழிவாற்றினீர்கள் என்று கேள்வியுற்றேன். அவ்வாறே எம் சேனைகளுக்கும் போர்க்

குணம் வளரும்படி சொற்பொழிவாற்றுமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று பணிவு தோன்றக் கூறினார்.

சிவகிரி ஜமீன்தாரின் பணிவையும், நற்குணத்தையும் கண்ட கவிராயர் மகிழ்ச்சி அடைந்தார். அதே சமயத்தில், தாம், சேற்றூர் ஜமீன்தாரவர்களுக்குக் கொடுத்துள்ள வாக்குறுதியை நினைத்தார். சிவகிரி ஜமீன்தாரின் வேண்டுகோளை நிறைவேற்ற முடியாமையை நினைத்து மனம் வருந்தினார்; மௌனமாய் இருந்தார்.

"தாங்கள் மௌனமாய் இருப்பதற்குக் காரணம் என்ன? தங்களால் ஆகாத வேலையை யான் தங்களைச் செய்யச் சொல்லவில்லையே!'' என்றார் சிவகிரி ஜமீன்தார்.

"மன்னிக்க வேண்டும்; என்னால் இந்த இடத்தில் செய்ய முடியாத வேலையைத்தான் தாங்கள் என்னைச் செய்யச் சொல்லுகிறீர்கள். இப்படி யான் சொல்லியதற்காக தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்,'' என்றார் கவிராயர்.

"தாங்கள் சொல்லிய வார்த்தைகளிலிருந்து எதையும் விவரமாக என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை'' என்றார் ஜமீன்தார்.

"இனியும் தாமதிப்பதில் பயனில்லை'' எனக் கருதிக் கவிராயர் ஜமீன்தாரை நோக்கி, 'நாமகளும், பூமகளும் நாளும் பொருந்த வாழ்பவரே! யான் சொல்வதைக் கேட்டல் வேண்டும். சேற்றூர் ஜமீன்தாரின் சேனைகளுக்குப் போர்க்குணம் உண்டாகுமாறு யான் சொற்பொழிவாற்று முன் அந்த

ஜமீன்தார் என்னை நோக்கி, 'அத்தகைய சொற் பொழிவை மட்டும் நீங்கள் வேறு எங்கும் ஆற்றுதல் கூடாது!' என்று பணிவுடன் கூறினர். சரியோ, தவறோ, யான் அவர் கேட்டுக் கொண்டபடி நடப்ப தாக ஒப்புக்கொண்டேன். ஆகையால், இப்போது யான் என் வாக்குறுதியை மீறி நடப்பதற்கு முடி யாமையைத் தங்களிடம் தெரிவித்துக் கொள்ளு கிறேன்'' என்று சொன்னர்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் ஜமீன்தார் இரண்டொரு விநாடி நேரம் எதைப் பற்றியோ நினைத்தார். பின்னர், அவர், கவிராயரைப்பார்த்து, ''நான் சொல்வதை நீங்கள் கவனமாகக் கேட்க வேண்டும். நியாயமற்ற வாக்குறுதிக்கு ஒருவர் மற்றொருவரை இணங்கும்படி வற்புறுத்துவதும், மற்றொருவர் அதற்கு இணங்குவதும் நியாய மாகுமா? இதை நீங்களே யோசித்துப்பாருங்கள். யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வொன்றைப் பற்றிச் செய்யப்படும் வாக்குறுதியே வாக்குறுதி எனப்படும். கல்வியில் வல்ல கவிராயராகிய தங் களுக்கு நான் இதைச் சொல்லவும் வேண்டுமோ? கல்வியும், அதற்கு அடிப்படையான நூல்களும் எல்லோருக்கும் பொதுவானவை. அவற்றை ஒரு வர் மற்றொருவருக்கு 'உபயோகித்தல் கூடாது' என்றுரைப்பதும், வாக்குறுதிப் பெறுதலும் பொருந்தாது. ஆகவே, நீங்கள் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்'' என்று சொன்னர்.

உடனே கவிராயர், ''ஆலோசிப்பதற்கு ஒன்று மில்லை. குறிப்பிட்ட ஒரு வேலைக்காகச் செய்யப்

படும் வாக்குறுதி பொருத்தமான தென்றும், நியாய மான தென்றும் எனக்குத் தோன்றுகிறது. எப் படியானுலும் வாக்குறுதி வாக்குறுதிதான்! யான் இங்கே வருமுன் என்னை அழைப்பதற்குரிய வேலை என்னிடம் விளக்கப் பட்டிருக்குமானுல், அப் பொழுதே யான் என்னுடைய இந்தக் கருத்தை விளக்கி இருப்பேன்'' என்று சொன்னுர்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட ஜமீன்தார் கோபப்படுவதற்குப் பதிலாகப் புன் சிரிப்புற்றுக் கவிராயரைப் பார்த்து, ''ஒரு செய்தியைப் பற்றிப் பலர் பல் விதமாக நினைக்கலாம். முடிவாக யான் சொல்லுவது இதுதான். என் கருத்துப்படி நீங்கள், நடக்கச் சம்மதித்தால் தலைமுறை தலைமுறையாக உங்கள் மரபினர் வாழ்வதற்குரிய அளவுக்கு நில மும், பொருளுந் தர நான் விரும்புகிறேன். இவ்வாறு செய்ய எந்த ஜமீன்தாரும் முன்வரமாட்டா ரென் பது என் கருத்தாகும். மறுபடியும் நன்ருக ஆலோ சித்து முடிவாக ஒரு பதிலைச் சொல்லுங்கள்'' என்ருர் ஜமீன்தார்.

உடனே கவிராயர் ஜமீன்தாரை நோக்கி, ''நீங்கள் எனக்குச் செய்ய நினைக்கும் உதவி எனக் குப் பேருதவியாகத்தான் இருக்கும். தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். யானும், என் பரம் பரையினரும் தலைமுறை தலைமுறையாக வயிறு வளர்க்கலாமென்பதைக் கருதி, யான் என் வாக் குறுதியைக் காற்றில் பறக்க விடுதல் தமிழர்க்குரிய செயலாகாது. கவிராயனென்று பேர் படைத்த யானே வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டால்

உலகம் என்னை எள்ளி நகைக்கும். தமிழராகிய தாங்கள், யான் என் வாக்குறுதியில் நிலைத்து நிற்பதைக் கண்டு மகிழ்ச்சி யடைவீர்களென்று நம்புகிறேன். இனி, யான் சொல்வதற்கு ஒன்று மில்லை'' என மொழிந்தார்.

கவிராயரின் உறுதியான இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் சிவகிரி ஜமீன்தார் கவிராயரைப் பார்த்து, ''கல்வியில் வல்லவரே! கவலைப்பட வேண்டா. யான் இப்போது நேரத்திற் கேற்றபடி பேசுவதாக நினைக்க மாட்டீர்களென்று நம்புகிறேன், தங்கள் ''வாக்குறுதி''யில் தாங்கள் எவ்வளவுதூரம் நிலைத்திருக்கிறீர்கள் என்பதை அறியவே யான் முயற்சி செய்தேன், என் முயற்சி தோல்வியுற்றதனுல் எனக்கு வருத்தமில்லை. 'வாக்குத் தவறக்கூடாது' என்னும் தங்கள் மனவுறுதியைக்கண்டு யான் பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன். என் விருப்பத்தைத் தாங்கள் நிறைவேற்றவில்லை என்பதைப்பற்றி யான் சிறிதும் வருந்தவில்லை'' என்று விளம்பினுர்.

''தங்கள் பெருங்குணத்திற்காக யான் தங்களைப் போற்றுகிறேன். அதேநேரத்தில் யான் தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லையே என்றும் வருந்துகிறேன்,'' என்ருர் கவிராயர்.

பின்னர், சிவகிரி ஜமீன்தார் கவிராயரை அன்று முழுவதும் தமது அரண்மனையில் இருக்கச் செய்து மறுநாள் காலையில் அவரை அன்புநிறைந்த வார்த்தைகள் பல கூறிப் பல்லக்கிலேற்றி ஊருக்குப் போய்வருமாறு உத்தரவு கொடுத்து அனுப்பினுர்.

நாட்கள் சில சென்றன. சிவகிரி ஜமீன்தாருக்கும், கவிராயருக்கும் நடந்த உரையாடலை ஒற்றர் மூலமாகச் சேற்றூர் ஜமீன்தார் அறிந்தார். அவர் அளவிலா மகிழ்ச்சியுற்றுக் கவிராயரைப் பல்லக்கு அனுப்பி வரவழைத்தார்! கவிராயரின் வாக்குறுதி தவறாத நற்குணத்திற்காகக் கவிராயரைப் புகழ்ந்து போற்றினார்; கவிராயரும் அவர்தம் பரம்பரையினரும் தலைமுறை தலைமுறையாக வாழ்வதற்கேற்ற விளை நிலத்தையும், பொருளையும் கவிராயருக்கு வழங்கினார்.

கவிராயர் மிகவும் மகிழ்ந்து, ''நாணயமுள்ள எவரும் தாம் கொடுத்த வாக்குறுதியிலிருந்து தவறி நடக்கமாட்டார். என்னைப்போலவே வாக்குறுதியைக் காப்பாற்றக் கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆகவே, தாங்கள் என்னை இவ்வளவு அதிகமாகப் போற்றிப் புகழ்ந்து எனக்குப் பொருளுதவி செய்து நிலபுலன்களை அளித்தமைக்குக் காரணம் தங்கள் பெருந்தன்மையே யன்றி என் குணநலமன்று'' என விளம்பினார்.

கவிராயரின் அடக்கமான வார்த்தைகளைக் கேட்ட ஜமீன்தார் பின்னும் மகிழ்ச்சியுற்றார். அன்று, பகல் உணவைக் கவிராயருக்கு ஜமீன்தார் தம் கையினாலேயே பரிமாறினார்; கவிராயர் உணவருந்திக்கொண்டிருக்கும்போது ஜமீன்தார் பொன் நாணயங்கள் நிறைந்த ஒரு பையைப் பரிசாகக் கொண்டுவந்து கவிராயரின் பக்கத்தில் வைத்தார்.

அதைக்கண்ட கவிராயர் ''ஒரு கையிலே சோறும், ஒரு கையிலே பொன்னும் எடுத்துக்

கொண்டு வருகையிலே ஆதரவான வார்த்தை பேசு தல், பெருகிய புகழ் மிக்க, திருமிக்க, பெரு மகனு ராகிய எங்கள் சிவப்பிரகாச துரைக்குள்ள குண மாகும்'' என்னும் கருத்தமைந்த,

**''ஒருகையில் அன்னம் ஒருகையில் சொன்னம்**
**வருகையில் சம்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்**
**சீமானு மெங்கள் சிவப்பிரகா சத்திருவக்**
**கோமானுக் குள்ள குணம்''**

என்னும் வெண்பாவை விரைந்து பாடினுர்! சிவப் பிரகாச துரையின் மகிழ்ச்சி பின்னும் அதிகமா யிற்று.

தில்லையம்பலக் கவிராயர் ஜமீன்தார் தமக்குக் கொடுத்த நில புலன்களை ஏற்றுக்கொண்டு, தம் குடும்பத்தினருடன் சேற்றூரிலேயே தங்கி, வேண் டும்போது, சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டு வாழ்ந்து வரலானுர். அவரைக்காணும் அறிஞர் பலர் **'' வாக்குத் தவருமையினுல் வந்த வாழ்வு பெற்றவர் ''** என்று சொல்லி மகிழலாயினர்!

கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுகிறவர் களுக்குக் குவலயத்தில் அழியாப்புகழ் பெருகுமென் பதில் ஐயமில்லை.

★

## 2. அறம் வளர்த்த அண்ணல்

தமிழ் இலக்கியங்களில் எதை எடுத்துப் படித்தாலும் அதில் தமிழர்களின் வீரமும், கொடையும் சிறந்து விளங்குவதைக் காணலாம். வீரத்தில் நீதியையும், கொடையில் தகுதியையும் தமிழ் நூல்களில் நாம் காண்பதைப்போல வேறு எம்மொழி நூலிலும் காண இயலாது. இவற்றிற்கு ஆதாரமாக நூற்றுக் கணக்கான செய்திகளை நாம் தமிழ் நூல்களில் காணமுடியும்.

**பல்வித மாகிய கொடையோடு வீரமும்**
**பாரோர்க் குணர்த்திய தமிழ்நாடு**

என்றொருவர் தமிழ்நாட்டைப் புகழ்வாராளுல், அந்தப் புகழ்மொழி தமிழ் நாட்டிற்குப் பொருத்த முள்ளதாகவே யிருக்கும்.

தொண்டைவள நாட்டிலே, சில நூற்றுண்டுகளுக்கு முன்னர், காஞ்சீபுரத்திற்குத் தெற்கே சுமார் எட்டு மைல் தொலைவில் உள்ள திருமாகறல் என்னுமூரிலே, சைவ வேளாளர் குடியிலே பிறந்த புண்ணியகோட்டி முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் செல்வப்பொருள் சிறிதும் இல்லாதவர்; கல்விப்பொருள் சிறிது வாய்க்கப் பெற்றவர். அவர் வறியவ ராதலின் உறவினரில் பலர் அவரைப் "புண்ணியகோட்டி முதலியார்" என்றுரையாமல், "புண்ணியகோட்டி" என்றே அழைத்து வந்தனர்.

புண்ணியகோட்டி முதலியார் வறிஞராய் இருந்தமையினுல், பிறர் நிலத்திலே உழுது பயிர் செய்து

அதனால் கிடைக்கும் தானியத்தில் நிலத்திற் குரிய வருக்குரியதைக் கொடுத்துவிட்டுத் தாம் தமக்குரிய பகுதியைக் கொண்டு காலங்கழித்து வந்தார். **"அறஞ்செய விரும்பு"** என்று தாம் "ஆத்தி சூடி" யில் படித்த வாக்கியத்தை அவர் எப்போதும் மறவா மல் தம் மனத்தில் நினைத்திருந்தமையினால், தம் முடைய வறிய நிலையிலும் அவர் தம்மாலான உதவி களைத் தம்மினும் வறியவர்களுக்குச் செய்து வந்தார்.

ஒரு சமயம் அவரிடம் இரண்டு வராகன்கள் இருந்தன. அப்போது "அம்மணி" என்னும் பெயரினையுடைய அவர் மனைவியார், அவரை நோக்கி, "தங்களுக்கு இருப்பவை இரண்டே சோமன்கள்; அவைகளும் கிழிந்து கிடக்கின்றன. தாங்கள் நம் வீட்டில் உள்ள இரண்டு வராகன்களையும் எடுத்துக் கொண்டுபோய் "இரண்டு சோடி" சோமன்களை வாங்கி வாருங்கள்" **என்று** சொன்னார்.

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை" யாகிய மனைவியாரின் வார்த்தையின்படியே நடக்கப் புண் ணிய கோட்டி முதலியார் ஒப்புக்கொண்டு, வீட்டில் இருந்த இரண்டுவராகன்களையும் எடுத்துக்கொண்டு, காஞ்சீபுரத்திற்குச் சென்றார். அங்குச் சென்ற வுடன், தம் மனைவி உடுத்துக் கொண்டுள்ள புடை வையும் கிழிந்திருப்பதை அவர் நினைத்தார். ஆகவே, அவர் கடையிற்சென்று தமக்கொரு சோமனையும், தம் மனைவிக்கொரு புடைவை யையும் விலைக்கு வாங்கிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார்.

கணவர் வாங்கிக் கொண்டு வந்தவைகளைக் கண்ட மனைவியார், "எனக்கு ஏன் புடைவை வாங்கி வந்தீர்கள்? என்புடைவை கிழிந்திருப்பது உண்மை தான். அதை நான் தைத்துக் கட்டிக்கொள்ளு வேனே! அதற்கோர் ஊசியும் நூலும் வாங்கி வந்தாற் போதுமே! தங்கள் சோமன்தான் தைக்க முடியாதபடி நைந்தும் கிழிந்தும் இருக்கின்றது. வீட்டிற்குள் இருக்கும் நான் எப்படி இருந்தால் என்ன? வெளியிற் செல்லும் தாங்கள் அல்லவோ ஒழுங்காக இருக்க வேண்டும்" என்று சொன்னார்.

உடனே கணவர், "போதும் உன் புத்திமதி. மனைவிக்கு ஒரு நல்ல புடைவை இல்லாதபோது கணவன் ஆடம்பரமாகத் திரிந்தால் அறிவுள்ள வர்கள் எவரும் அவனை இகழாமல் இருக்க மாட் டார்கள்" என்று சொன்னார்.

பிறகு கணவரும் மனைவியாரும் தங்கள் புதிய உடைகளை மறுநாள் உடுத்துக்கொள்ளலாமென்று தீர்மானித்து மடித்துப் பெட்டியில் வைத்தார்கள்.

"அறக்கடவுள் சோதனையோ" என்று ஐயுறும்படி அன்று இரவு முன்னேரத்தில், திடீரென்று ஆரம்பித்து, மழை பெய்து கொண்டி ருந்தது. ஊரில் உள்ளவர்கள் அனைவரும் உணவு கொள்ளும் நேரம். புண்ணியகோட்டி முதலியா ருக்கு அவர் மனைவியார் உணவு படைக்க ஆரம்பித் தார். அப்போது தெருக்கதவை யாரோ தட்டுவது போல ஓசை கேட்டது. உடனே, முதலியார் சென்று "யார்" என்று கேட்டுக் கொண்டே தெருக்கதவைத் திறந்தார்; அவருக்குப் பின்னால்,

அவர்தம் மனைவியார், பித்தளை விளக்கொன்றை வைத்துக்கொண்டு நின்றார்.

கதவு திறக்கப்பட்டவுடன் மழையில் நனைந்து தண்ணீர் சொட்டச் சொட்ட ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாக இருவர் உள்ளே நுழைந்தனர். பெண்ணின் கையில் ஒரு குழந்தை இருந்தது. அடிக்கும் காற்றினால் விளக்கு அணைந்து போகாதபடி, காற்றைத் தடுப்பதற்காக, முன்போல முதலியார் தெருக்கதவைச் சாத்தித் தாளிட்டார்.

உள்ளே வந்த ஆணும் பெண்ணும், கணவனும் மனைவியும் ஆவர் என்பதை ஒரு விநாடி நேரத்தில் புண்ணியகோட்டி முதலியாரும் அவர் மனைவியாரும் உணர்ந்து கொண்டனர். வந்தவர்கள் இருவரும் உடுத்துக்கொண்டிருந்த உடை கிழிந்து கந்தலாய் இருந்தது. அதைப் பார்த்த முதலியாரும் அவர் மனைவியாரும் ஒருவரை ஒருவர் ஒரு விநாடி நேரம் நோக்கினர்; உடனே, ஒருவர் கருத்தை மற்றொருவர் பழக்கத்தினால், சொல்லாமலே உணர்ந்து கொண்டனர். பிறகு, இருவரும் வந்தவர்களை விளக்கு வெளிச்சத்தில் இருக்கச் செய்து, தாங்கள் உள்ளேசென்று, அன்று வாங்கிவந்த சோமனையும் புடைவையையும் கொண்டுவந்து முறையே கணவனுக்கும் மனைவிக்கும் கொடுத்து உடுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டுத் தாங்கள் உள்ளே சென்றனர்.

கொடுத்த உடையை அவர்கள் உடுத்துக் கொண்டார்கள் என்று தெரிந்த பிறகு முதலியாரும் அவர்தம் மனைவியாரும் மீண்டும் அவர்கள் முன்னே வந்து தோன்றினர். தாயார், குழந்தையின்

ஈரத்தைப் போக்கித் தன் புடவையின் தலைப் பினால் குழந்தையை மறைத்துக் குளிர் வருத் தாதபடி அதைப் பாதுகாத்துக் கொண்டிருந்தாள். இதைக் கண்ட முதலியாரும் அவர்தம் மனைவியாரும் மனமிக மகிழ்ந்தனர்.

''கொடையும் தயையும் பிறவிக் குணம்'' என்று, வந்தவர், குழந்தையை வைத்துக் கொண்டிருந்த தம் மனைவியாரைப் பார்த்துச் சொன்னார்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடன் முதலியார், ''இவர், கல்விமான்போலக் காணப்படுகிறார். ஏதோ காலவித்தியாசத்தினால் இவ்வாறு வந்திருக் கிறார்'' என்று எண்ணிக்கொண்டு, ''நீங்கள் சாப்பிடவில்லை போலிருக்கிறதே,'' என்று வந்த மனிதரைப் பார்த்துச் சொன்னார்.

''ஆமாம்; நாங்கள் இருவரும் நேற்று இரவுதான் கடைசியாகச் சாப்பிட்டோம். தாய்ப்பால் போதுமான வரையில் இல்லாமையினால் குழந்தையும் அரைப் பட்டினிதான்,'' என்று வந்தவர் விளம்பினார்.

மறு பேச்சொன்றும் பேசாமல் முதலியாரும், அவர்தம் மனைவியாரும் அவர்களை உட்காரச்சொல்லி விட்டு உள்ளே சென்றனர். தொழுவத்தில் கட்டப் பட்டிருந்த பசுவினிடமிருந்து கொஞ்சம் பாலை முதலி யார் கறந்து கொண்டு வந்தார். சிறிது நேரத்திற்குள் அதை அவர்தம் மனைவியார் பக்குவமாகக் காய்ச்சிக் குழந்தை குடிப்பதற்கேற்ற அளவில் சூடு குறையும் படி ஆற்றிக் கொண்டு வந்து குழந்தையின் தாயா ரிடத்தில் கொடுத்து அதைக் குழந்தைக்குக் கொடுக் கும்படி கூறினார்.

எதிர்பாராத இந்த உதவியினுல் வந்தவர்களாகிய கணவனும் மனேவியும், அடைந்த ஆச்சரியத்திற்கும் ஆனந்தத்திற்கும் அளவில்லை.

குழந்தை போதுமான வரையில் பாலேக் குடித்தவுடன் களேத்து உறங்கிவிட்டது.

பிறகு, வந்தவர்களாகிய கணவனுக்கும் மனேவிக்கும் ஆகாரம் பரிமாறப்பட்டது. அவர்கள் உண்டு மகிழ்ந்தார்கள்.

"பொழுது விடிந்தவுடன் பேச வேண்டியவைகளேப் பேசிக்கொள்ளலாம். நீங்கள் இந்த விசாலமான நடைத் திண்ணேயின்மீது படுத்துக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தையைப்போலவே நீங்களும் களேத்திருக்கின்றீர்கள்" என்று சொல்லி, அவர்களுக்குப் பாய் தலேயணே முதலியவைகளேக் கொடுத்துவிட்டு முதலியார் தம் மனேவியுடன் வீட்டினுள் கூடத்திற்குச் சென்ருர். இருந்த ஆகாரத்தை வந்தவர்களுக்குப் பரிமாறி விட்டபடியால் முதலியாரும் அவர்தம் மனேவியாரும் உணவின்றியே உறங்கலாயினர். நள்ளிரவுக்குப் பின்னர் மழை நின்றுவிட்டது. ஆகாயத்தில் இருந்த மேகக் கூட்டம் கலேந்து விட்டது. நட்சத்திரக் கூட்டங்கள் காணப்பட்டன.

பொழுது விடிந்தது. முதலியார் நடையருகில் வந்து "ஐயா, ஐயா!" என்று பலமுறைக் கூப்பிட்டார். பேச்சில்லே. பிறகு சந்தேகத்துடன் எட்டிப் பார்த்தார். நடைத்திண்ணேயின் மீது ஒருவரையும் காணேம்! அப்போது அங்கே அவர் மனேவியாரும் வந்தார். அவரும் செய்தியை உணர்ந்தார். பிறகு

கணவனும், மனைவியாரும் ஆச்சரியத்துடன் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்தனர்!

"யாரோ நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் வரலாற்றைச் சொல்ல வெட்கப் பட்டுப் போய்விட்டார்கள். போகட்டும். தகுந்த சமயத்தில் நாம் அவர்களுக்கு உதவி செய்தோம்; அஃது ஒன்றே நமக்கு மகிழ்ச்சி அளிப்பதாகும்," என்று முதலியார் சொன்னார்.

"அதற்கென்ன தடை" என்றார் மனைவியார்.

பின்னர் வழக்கம் போல முதலியாரும் அவர்தம் மனைவியாரும் தங்கள் குடும்ப காரியங்களைப் பார்க்கத் தலைப்பட்டார்கள்.

பல தினங்கள் சென்றன. அந்தத் திருமாகறல் கிராமத்தில், நீர்ப்பாசனத்திற்காக உள்ள ஏரிக்கரையின் உடைந்த பகுதியைக் கட்டுவதற்காக, அந்தப் பகுதியில், கூலியாட்கள் சிலர், பக்கத்தில் இருந்த புறம்போக்கு நிலத்திலிருந்து மண்ணை வெட்டி எடுத்துக்கொண்டுவந்து கொட்டிக் கொண்டிருந்தனர். கூலியாட்கள் மண்ணை வெட்டிக் கொண்டிருக்கும் போது, ஒரு கூலியாளின் மண் வெட்டி ஏதோ ஒரு கடினப்பொருளின்மீது பட்டு "கிண்" என்று ஒலித்தது. அந்த இடத்தில் கூலியாள் ஆச்சரியத்துடன் மண்வெட்டியினால் மண்ணைப்பறித்தான். அங்கே ஒரு செப்புப்பானை இருந்தது! "புதையல், புதையல்" என் று கூலியாள் கூச்சலிட்டான். மற்ற கூலியாட்களும், பிறர் சிலரும், கூலியாட்களை வேலைசெய்யுமாறு தூண்டிக்கொண்டிருந்த ஆட்சியாளரின் ஆளொருவரும் 'புதையல்' என்ற

சொல்லைக்கேட்டவுடனே, அவ்வாறு சொல்லியவன் இருந்த இடத்தில் வந்து கூட்டமாகக் கூடிவிட்டார்கள். செப்புப்பாத்திரம் தோண்டி எடுக்கப்பட்டது. பாத்திரம் சற்றேக்குறைய ஒரு பெரிய பூசுணைக்காய் அளவிருந்தது. தக்கவர்களைச் சாட்சியாக வைத்துக்கொண்டு ஆட்சியாளரின் ஆள், புதையல் பாத்திரத்தின் மேல்மூடியைத் திறந்தார். ஆச்சரியம்! பாத்திரம் நிறையப் பொற்காசுகள் இருந்தன! உடனே அவற்றை அரசரிடம் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டுமென்று ஆட்சியாளரின் ஆள் கூறினர். மறுவார்த்தை இன்றித் தக்க துணையுடன் "புதையல்" அரசரிடம் எடுத்துச் செல்லப் பட்டது.

அப்போது காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவ மன்னர்களில் ஒருவராகிய **காஞ்சி நல்லான்** என்னும் காரணப் பெயர் கொண்ட ஒருவர் சோழநாட்டின் பெரும் பகுதியை அரசாட்சி செய்து கொண்டிருந்தார். அவரிடத்தில்தான் நாம் மேலே குறிப்பிட்ட புதையல் கொண்டுபோய்ச் சேர்க்கப் பட்டது. தம்முடைய நற்குண நற்செயல்களினல் 'காஞ்சி நல்லான்' என்னும் காரணப் பெயர் கொண்ட அந்தப்பல்லவ மன்னர், மக்களிடம் புகழ் பெற்றிருந்தார். அவர் அப்போதுதான் நோய் வாய்ப்பட்டு நலமுற்றெழுந்தார். தாம் நோயினின்றும் நலமுற்றெழுந்தமையை முன்னிட்டு அவர் பலவித அறச் செயல்களைப் புரிந்து கொண்டிருந்தார். அந்தக்காலத்தில்தான் அவரிடம் புதையல் வந்து சேர்ந்தது.

புதையலாகிய செப்புப் பானையில் பதினாயிரம் பொற்காசுகள் இருந்தன! அந்தக் காசுகளைப் பல்லவ மன்னர் பார்வையிட்டார், அவற்றை அவர் எடுத்துக் கொள்ளவோ, அரசாங்கத்தில் சேர்த்துவிடவோ விரும்பவில்லை; அவைகளைத் தக்கார் ஒருவரிடம் சேர்த்து, நல்வழியில் பெருக்கி அறத்தை வளர்க்க வேண்டுமென்று தீர்மானித்தார். இதை அவர் தம்மைச் சார்ந்தவர்களிடம் உரைத்தார். பொருளைச் செலவிடுவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியைச் சொல்லினர்.

"நீங்கள் சொல்வது சரி; யான் நினைபபதும் ஒன்று உண்டு. இந்தப் புதையல் எந்த ஊரில் இருந்து கிடைத்ததோ அந்த ஊரில் தக்கார் எவரேனும் இருப்பின் அவரிடம் இதைச் சேர்த்து இதைத் தக்க வழியில் விருத்தி செய்து அறம்பல புரியுமாறு கட்டளையிடல் வேண்டும்," என்று பல்லவ மன்னர் கூறினர்.

நல்லவராகிய அரசரின் கருத்தை மறுத்துக் கூறுவார் எவருமில்லை. ஆனல், புதையல் கிடைத்த திருமாகறல் என்னும் ஊரில் உள்ளவர்களில் தக்கார் எவர் என்பதை ஆராயும்போதுதான், அவ்வூரிலுள்ளவர்களை அறிந்தவர்களிற் சிலர் முன் வந்து, ஒவ்வொருவரும் ஒவ்வொருவரின் பெபரைக் குறிப்பிட்டு, "இவரே தக்கார், இவரே தக்கார்," என்றனர்.

அவர்கள் சொல்லிய பெயர்களை யெல்லாம் அரசர் கேட்டுவிட்டு உதட்டைப் பிதுக்கினர். காரணம்? அவர் எதிர்பார்த்த ஒருவருடைய பெபரை

அவர்களில் ஒருவரும் சொல்லவில்லை. அதனால், இறுதியில் அரசர் அவர்களைப் பார்த்து, "புண்ணியகோட்டி முதலியார் என்பவரைப் பற்றி உங்களில் ஒருவரும் கேள்விப் பட்டதில்லையோ?" எனக் கேட்டார்.

ஏழையாகிய புண்ணியகோட்டி முதலியாரைப் பற்றி அவர்களில் ஒருவரும் அதுவரையில் கேள்விப் பட்டதில்லை. ஆகவே, அரசர் கேட்ட கேள்விக்கு அவர்கள் விடை கூறாமல் மௌனமாய் இருந்தார்கள்.

உடனே அரசர் அவர்களை நோக்கி, "ஏழைகளைப் பற்றி எந்தக் காலத்திலும் எவரும் கவலை கொள்வதில்லை. ஆகவே, ஏழைகளிற்சிலர் எவ்வளவு நல்லவர்களாய் இருந்தாலும் அவர்களைப் பற்றி எவருக்கும் ஏதும் தெரிவதில்லை. புண்ணியகோட்டி முதலியார் தற்போது ஏழையாய் இருக்கலாம். ஆனால், அவருடைய அருங்குணத்தைப் பற்றியும், அடக்கம் வாய்ந்த அறச்செயலைப் பற்றியும் நாம் அதிகமாகக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆகவே, அவரிடத்தில் நாம் இந்தப் பதினாயிரம் பொற் காசுகளையும் கொடுத்து, இவற்றை விருத்தி செய்து அவர் விருப்பம்போல் அறம்பலபுரியும்படி சொல்லப் போகிறோம்" என்று சொன்னார்.

அரசரின் இந்த நல்ல தீர்மானத்திற்கு எதிர் தீர்மானம் இருக்க முடியுமா! விருப்பமுள்ளவர்களும் இல்லாதவர்களும் ஒன்றாகச் சேர்ந்து "அரசர் கருத்துப்படியே நடக்கலாம்" என்றார்கள். "எவனே ஒருவனுக்குப் பேரும் பெருமையும் உண்

டாகப் போகின்றன'' என்று பொருமை கொண்ட சிலர் எண்ணி மனம் புழுங்கினர்: "யாரோ புண்ணியகோட்டி முதலியாராம், திருமாகறல் என்னும் ஊரில் இருப்பவராம், நமக்கு அவரைப் பற்றிய செய்திகளில் ஒன்றுந் தெரியாதே! நம்மரசர் மட்டும் அவரைப் பற்றிய செய்திகளை எவ்வாறு அறிந்து கொண்டார்!'' என்று சிலர் ஆச்சரிய முற்றனர்.

மறுநாள் காலையில் புண்ணியகோட்டி முதலியார் என்பவரைப் பல்லக்கில் அழைத்து வருமாறு அரசர் கட்டளை இட்டார். போர்வீரன் ஒருவன் குதிரைமீதமர்ந்து பணியாட்கள் சிலர் பல்லக்கைச் சுமந்துவர மாகறல் கிராமத்தை நோக்கிச் சென்றான். அந்தக் கிராமத்தை அடைந்தவுடன், "புண்ணியகோட்டி முதலியார்'' என்னும் பெயருள்ள மூவர் அந்தக் கிராமத்தில் இருப்பதை அறிந்த போர்வீரன் அவர்களில் 'எவரை அழைத்துக்கொண்டு போவது' என்று ஆலோசித்தான். அவனுக்கு யாதும் விளங்கவில்லை. உடனே அவன், பல்லக்கையும் அதைச் சுமந்து வந்தவர்களையும் அங்கேயே நிறுத்திவிட்டுக் குதிரை மீதேறிக் காற்றினும் கடிய வேகத்தில் சென்று காஞ்சிமா நகரை அடைந்து அரசரிடம் செய்தியை விளக்கமாகக் கூறினன்.

உடனே தம் பக்கத்தில் இருந்த புலவர் ஒருவரை அரசர் பார்த்தார். "தங்கள் கட்டளை என்னவோ?'' என்று புலவர் தம் அடக்கந் தோன்ற அரசரைக் கேட்டார்,

"தாங்கள் சென்றால், நாம் இருவரும் அன்று எவரைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தோமோ அவரை அழைத்துக் கொண்டு வரலாமன்றோ?" என்று அரசர் கேட்டார்.

"வரலாம்" என்றார் புலவர்.

பின்னர், அந்தப் புலவர் அரசர் கட்டளைப்படி ஒரு பல்லக்கில் அமர்ந்து போர்வீரனுக்குப் பின்னால் மாகறல் கிராமத்தை நோக்கிச் சென்றார். அவர் அந்தக் கிராமத்தை அடைந்தவுடன் புண்ணிய கோட்டி முதலியார் என்னும் பெயரினையுடைய மூன்றுபேர் புலவரின் எதிரே அழைத்து வரப்பட் டனர். அவர்களில் ஒருவரைப் போர்வீரனுக்குப் புலவர் சுட்டிக் காட்டினார்.

உடனே போர்வீரன் புலவர் சுட்டிக் காட்டிய புண்ணியகோட்டி முதலியாரை நோக்கி, "தங் களுக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது. அரசர் தங்களை அழைத்துக்கொண்டு வரச்சொன்னார். யாருக்காவது சொல்லிக்கொள்ள வேண்டுமானால் சொல்லிவிட்டு வந்து இதோ இந்தப் பல்லக்கில் ஏறிக்கொள்ளுங்கள்," என்று அங்கே முதன் முதல் கொண்டுவரப்பட்ட பல்லக்கை அவருக்குச் சுட்டிக் காட்டினான்.

புண்ணியகோட்டி முதலியார் விரைவாகத் தம் இல்லத்திற்குச் சென்று தம் மனைவியாரிடத்திலும், வேறிரண்டு உறவினர்களிடத்திலும் செய்தியைத் தெரிவித்துவிட்டுக் கட்டப்பட்ட ஒரு சிறு பையை எடுத்துக்கொண்டு போர்வீரன் குறிப்பிட்ட பல்லக் கில் சென்று உட்கார்ந்தார். புலவரும் தம்

பல்லக்கில் அமர்ந்தார்; போர்வீரன் குதிரைமீது உட்கார்ந்தான். பின்னர், போர்வீரன் காஞ்சியை நோக்கி முன்னே சென்ருன்: அவனுக்குப் பின்னுல் புலவர் இருந்த பல்லக்கும், புண்ணியகோட்டி முதலியார் இருந்த பல்லக்கும் முறையே சென்றன.

பல்லக்கில் போகும்போது புண்ணியகோட்டி முதலியார் பின்வருமாறு சிந்திக்கலானுர்: "நம்மைச் சுட்டிக் காட்டியவர், நம்மால் எங்கேயோ இதற்கு முன்னுல் பார்க்கப்பட்டவர்போல் இருக்கிருர். எங்கே பார்த்தோம்? எங்கே பார்த்தோம்? பார்த்த இடம் நினைவுக்கு வரவில்லை. ஆனுல், நாம் நிச்சயமாக இவரை இதற்குமுன் பார்த்திருக்கிருேம். எங்கே என்பதுதான் நினைவுக்கு வரவில்லை. சமயம் நேர்ந்தால் இவரைக் கேட்டுவிடுவோம்,'' என்று தீர்மானித்தார். அவர் மறுபடியும், ''அரசர் நம்மை எதற்காக அழைத்திருப்பார்? இதோ நமக்கு முன்னுல் குதிரைமீது செல்லும் குதிரை வீரனே நமக்கு நல்ல காலம் பிறந்திருப்பதாகக் கூறுகிருன். இதற்கு முன் நமக்குக் கெட்டகாலம் ஒன்றுமில்லையே. உண்பது நாழி; உடுப்பது நான்கு முழந்தானே. இவ்வளவில் நாம் குறைவில்லாமல் தானே இருந்தோம். ஆகவே, கெட்டகாலமென்பதையே நாம் அறிந்ததில்லையே. எல்லா நிகழ்ச்சிகளும் ஆச்சரியத்தைத் தருகின்றன. போகப் போக—ஏன், இன்னும் சில நாழிகைக்குள், யாவும் விளங்கிவிடும்,'' என்று புண்ணியகோட்டி முதலியார் கருதினுர்.

அன்று சூரிய வெப்பம் கடுமையாக இல்லை. இருந்தாலும் காஞ்சீபுரத்திற்கு அருகில் உள்ள, பாலாற்றங் கரையை அடைந்தவுடன், பல்லக்கைச் சுமப்பவர்கள் தண்ணீர் பருகிச் சற்று இளைப்பாறு வதற்காகப் பல்லக்கை இறக்கித் தரையில் வைத்து விட்டு நீரோடைக்குச் சென்றார்கள். போர்வீர னும் குதிரையை அங்கே ஓர் இடத்தில் மேயவிட்டு நீர் பருகச் சென்றான்.

புலவர், பல்லக்கில் இருந்து வெளிவந்து நீரோ டையை நோக்கிச் சென்றார்; புண்ணியகோட்டி முதலியாரும் அவரைப் பின்தொடர்ந்தார்.

"நீங்கள் என்னைத் தற்சமயம் நெருங்காமல் இருப்பது நம் இருவருக்கும் நல்லது," என்று புண் ணியகோட்டி முதலியாரின் காதில் படும்படி புலவர் சொல்லிவிட்டு விரைந்து நீரோடையை நோக்கிச் சென்றார்.

"எல்லாம் அதிசயமாகவே இருக்கிறது" என்று எண்ணிக்கொண்டு புண்ணியகோட்டி முதலியார் புலவரை நெருங்காமலே தாமொருபுற மாக நீரோடைக்குச் சென்று நீர் பருகிவிட்டுப் பல் லக்கில் சென்று அமர்ந்தார். பின்னர், புலவரும் தாமிருந்த பல்லக்கில் வந்து உட்கார்ந்தார். வீரன் குதிரைமீதமர்ந்தான்; குதிரை புறப்பட்டது; பல்லக்குகளும் பின்னால் சென்றன.

அன்றுமாலை, மணி நான்கு இருக்கலாம். 'காஞ்சி நல்லான்' என்னும் காரணப் பெயர் கொண்ட அரசர் தமது அரசவையில் அரியாசனத் தில் அமர்ந்திருக்கின்றார். அமைச்சர்களும், பிறரும்

அவரவர்களுக்குரிய இடத்தில் இருந்தார்கள். அரசருக்கு அருகில், அமைச்சர்களுக்குப் பக்கத்தில், ஓர் இருக்கை இருந்தது. அதில் எவரும் உட்கார்ந்திருக்கவில்லை. பின்னர், அரசர் கட்டளைப்படி புண்ணியகோட்டி முதலியார் அரசவைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். முதலியார், அரசரை வணங்கி, அரசர் கட்டளைப்படி அமைச்சர்களுக்கு அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தார். அப்போதும் புண்ணியகோட்டி முதலியார் கிழிந்த உடையையே உடுத்திக் கொண்டிருந்தார். எல்லா நிகழ்ச்சிகளையும் அரசவையில் இருந்தவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அரசர் புண்ணியகோட்டி முதலியாரைப் பார்த்து, "நான் இப்போது தங்களைக் கேட்கப்போகும் கேள்விகளுக்குத் தாங்கள் அச்சமின்றி உட்கார்ந்தபடியே, எதையும் மறைக்காமல், பதில் சொல்லவேண்டும்," என்றார்.

"தங்கள் கட்டளையை மீறமாட்டேன்," என்றார் முதலியார்.

உடனே அரசர், முதலியாரைப் பார்த்து, "சென்ற ஆண்டிலே திருமாகறல் கோயிலில் திருவிழா நடந்தபோது எவராலும் கவனிக்கப்படாத ஏழை ஒருவன் காய்ச்சல் கண்டு வருந்துகையில், அவனை அழைத்துக்கொண்டு போய் முடிந்த உதவிகளைச் செய்து, ஆதரவளித்தாரே ஒருவர் அவர் எவர்? பயப்படாமல் உண்மையைச் சொல்லுங்கள்," என்றார்.

"அடியேன்தான் அந்த ஏழைக்கு உதவியவன்," என்ருர் முதலியார்.

"அன்றே ஒரு வழிப்போக்கனுக்குத் தாங்கள் சோறு கொடுத்து அவன் பசியைப் போக்கினீர்கள் அல்லவா ?

" ஆம். "

"அவன், தங்களிடம் நூறு பொற்காசுகளை ஒரு பையிலே வைத்துக் கட்டி வைத்திருக்குமாறு கொடுத்தான் அல்லவா ?"

" ஆம். "

"அதைத் தாங்கள் என்ன செய்தீர்கள் ?"

"அப்படியே வைத்திருக்கிறேன்."

"ஏன் ?" என்று கேட்டார் அரசர்.

"அந்த வழிப்போக்கன் மறுபடியும் வரவில்லை. அவன் இருக்குமிடம் எனக்குத் தெரியாது, ஆகவே, அதை அப்படியே வைத்திருக்கிறேன்," என்ருர் முதலியார்.

"அவன் வராவிட்டால் என்ன செய்வீர்கள் ?"

"அவன் வரவில்லை. அந்தப் பொற்காசுகளை அரசராகிய தங்களிடம் கொண்டுவந்து சேர்த்து விடவேண்டும் என்பது என் எண்ணம்," என்று கூறி முதலியார் மறுபடியும் அரசரைப் பார்த்து, "தாங்கள் என்னை அழைப்பதாகக் குதிரை வீரர் வந்து சொன்னவுடன், தாங்கள் என்னை அழைப்பதற்குரிய காரியம் யாதாயிருப்பினும், இதையும் இப்போதே தங்களிடம் சேர்த்துவிட வேண்டும் என்றெண்ணி இதை எடுத்து வந்தேன்," என்று

சொல்லிப் பொற்காசுகள் நிறைந்த ஒரு சிறு பையை அரசரிடம் கொடுத்தார்.

இந்த நிகழ்ச்சி அரசவையில் இருந்த அனைவருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது; முதலியாரிடத்தில் மதிப்பையும் உண்டாக்கியது.

"கொஞ்சக் காலத்திற்கு முன்னால், மழையில நனைந்து கைக் குழந்தையுடன் உங்கள் இல்லத்திற்கு வந்த கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் நீங்கள் புதிய உடைகளைக் கொடுத்து அன்னமளித்தீர்களல்லவா?" என்று கேட்டார் அரசர்.

"ஆம்," என்றார் முதலியார்.

"அந்தப் புதிய ஆடைகள் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன? அவற்றை நீங்கள் அவர்களிடம் தரவேண்டியதற்குரிய காரணமென்ன? நீங்கள் கிழிந்த ஆடைகளைக் கட்டிக்கொண்டிருக்கின்றீர்களே!"

"என் மனைவியின் புடைவையும், என் சோமனும் கிழிந்து இருந்தமையினால், இந்தக் காஞ்சீபுரத்திற்கு வந்து நான் ஒரு புடைவையையும், ஒரு சோமனையும் வாங்கிக்கொண்டு போனேன். அன்றிரவுதான் மழை பெய்தது. யாரோ இருவர், கணவனும் மனைவியும், கைக்குழந்தையுடன் மழையில் நனைந்து என் வீட்டிற்குள் வந்தனர். குழந்தையுடன், குளிரால் நடுக்குறும் அவர்களின் நிலையைக் கண்டவுடன் நானும் என் மனைவியும் இரக்கப்பட்டு நாங்கள் மறுநாள் உடுத்துக்கொள்ளலாமென்று வைத்திருந்த புடைவையையும் சோமனையும் அவர்களுக்குக் கொடுத்து உடுத்திக்கொள்ளச்

சொன்னோம், எங்களுக்குக் கிழிந்த உடை தவிர வேறு நல்லுடை இல்லை என்பது உண்மைதான். இருப்பினும் வந்தவர்களின் நிலைமைக்கு இரங்கி நாங்கள் எங்கள் புதிய உடைகளை அவர்களுக்குக் கொடுத்துவிட்டோம்,'' என்றார் முதலியார்.

இவ்வாறு புண்ணியகோட்டி முதலியார் கூறி முடித்தவுடன் அரசர், தம் அவையில் இருந்தவர் களை நோக்கி, "பெரியோர்களே, இனி யான் சொல்லப்போவதைக் கவனத்துடன் கேட்குமாறு உங்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். யான் மாறுவேடத்துடன் சென்ற மாதத்திலே திருமாகறல் என்னும் திருப்பதியிலே நடந்த திரு விழாவையும், அங்கு வரும் கிராம மக்களின் நிலை மையையும் காணச் சென்றிருந்தேன். அப்போது திருவிழாவைப் பார்க்கவந்திருந்தவர்களில் ஒருவ னான ஓர் ஏழை காய்ச்சல் கண்டு மிகவும் வருந்திய வண்ணம் அங்கொரு மரத்தின் கீழ் படுத்துக் கொண்டிருந்தான். வருந்திக் கொண்டிருந்த ஏழை யைக் கவனிப்பார் எவருமில்லை. 'அன்பே சிவம்' என்று சொல்லிக்கொண்டு பக்திமான்களைப் போல காணப்பட்டவர்களும் வருந்திக் கொண்டிருந்த அந்த ஏழையைக் கண்ட பிறகும் காணாதவர்களைப் போலச் சென்று விட்டார்கள். இந்த நிலையிலே இந்தப் புண்ணியகோட்டி முதலியார் அங்கே வந்த வர் அந்த ஏழையைக் கண்டவுடன், அவனை எழுப்பி மெதுவாகத் தம் இல்லத்திற்கு அழைத்துக்கொண்டு போனார். அப்போது அவ்வூரார் ஒருவர், 'இவ னுக்கே தினந்தோறும் உண்ண உணவு சரியாகக்

கிடைப்பதில்லை. இவன் எப்போது பார்த்தாலும் இப்படி ஊருக்கு உழைப்பதே சரியெனத் திரிகிறான்' என்று சொல்லிக்கொண்டு போனதையும் யான் கேட்டேன். இதனால், புண்ணியகோட்டி முதலியார் ஏழையாயினும், கொடையும் தயையும் பிறவிக் குணமாகக் கொண்டிருக்கின்றார் என்பதை உணர்ந்தேன். உடனே புண்ணியகோட்டி முதலியாரின் பெயர் முதலியவைகளைக் கேட்டறிந்துகொண்டேன். பிறகு, நூறு பொற்காசுகளை நான்தான் இவரிடம் கொடுத்தேன். 'இவரைச் செல்வத்தினால் சிறக்கச் செய்தால் இவரை நாடுவோர் உண்மையில் நல முறுவர்,' என்பதை உணர்ந்தேன். பிறகு, இந்த என் எண்ணத்தை நம் புலவர் திலகரான தேவநாதரிடம் கூறினேன். 'அவரை யானும் அறிந்து வருகிறேன்,' என்று கூறித் தம் மனைவியாருடனும், கைக்குழந்தையுடனும் அவர் ஓரேழையைப் போலத் திருமாகறலுக்குச் சென்றார். பிறகு அவர் புண்ணிய கோட்டி முதலியாரின் இல்லம் இருக்குமிடத்தை விசாரித் தறிந்துகொண்டு போகையில் எதிர்பாராத விதத்தில் மழை வந்தது. மழையில் நனைந்துகொண்டு புலவர் முதலியவர்கள் புண்ணியகோட்டி முதலியார் இல்லத்திற்குச் சென்றார்கள். பின்னர் நடந்தசெய்திகள் முன்னரே இங்குச் சொல்லப்பட்டன. இன்னும் புண்ணியகோட்டி முதலியாரின் கொடை, தயை ஆகியவைகளை விளக்குவதற்குரிய பல செய்திகளை நான் கேள்விப்பட்டுள்ளேன்,'' என்று கூறினார்.

இவ்வாறு அரசர் விளம்பிய வார்த்தைகளைக் கேட்ட அவையினர் அங்கிருந்த புண்ணிய

கோட்டி முதலியாரைப் பெருவியப்புடன் பார்த்தனர்.

மறுபடியும் அரசர் தம் அவையிலிருந்த அமைச்சர் முதலியவர்களை நோக்கி, "திருமாகறலிலிருந்து நம்மிடம் வந்துள்ள புதையலாகிய பதினாயிரம் பொன் நாணயங்களையும் நாம் இந்தப் புண்ணியகோட்டி முதலியாரிடம் கொடுத்து, அவற்றை ஏற்ற வழியில் விருத்தி செய்து, அறம்பல புரியுமாறு இவரைக் கேட்டுக்கொள்ளலாம் என்பது என் எண்ணம். அமைச்சர் முதலியவர்களின் கருத்து யாதோ, அறியேன்," எனக் கூறினார்.

உடனே அமைச்சரொருவர் எழுந்திருந்து அரசரைப் பார்த்து, " தங்கள் அரசாட்சிக்குட்பட்ட நாட்டின் பல பாகங்களிலும் இவ்வாறு தகுதியுள்ளவர்களின் மூலமாக அறத்தை வளர்ப்பது நல்லதுதான்," என்று சொன்னார்.

பின்னர், அரசர், புண்ணியகோட்டி முதலியாரை நோக்கி, "தங்கள் ஊரிலிருந்து ஒரு புதையல் கிடைத்தது. அதைப்போலவே தாங்களும் எங்களுக்கு ஒரு புதையலாகக் கிடைத்திருக்கின்றீர்கள். தங்கள் ஊரிலிருந்து கிடைத்த பதினாயிரம் பொற்காசுகளையும் தங்களிடமே கொடுத்துவிடுகிறோம். தாங்கள் அதை விருத்திசெய்து நல்லவர்களுக்கும் தகுதியுள்ளவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும். மேலும் பொருள் வேண்டுமானாலும் தருகிறோம். வேண்டுமளவுக்கு எங்களுடைய உதவி உங்களுக்கு எப்போதும் கிடைக்கும்," எனக் கூறினார்.

அரசர் உரைத்த வார்த்தைகளைக் கேட்ட வுடன் புண்ணியகோட்டி முதலியார் எழுந்து நின்று அரசரைப் பார்த்து, "ஐயனே, யான் இதுவரையில் செய்துள்ள அற்பச் செயல்களுக்காக என்னைத் தாங்கள் பலர் முன்னிலையில் இவ்வளவு உயர்த்திப் பேசுதல் வேண்டுமோ! என்னை உயர்த்திப் பேசுவதற்குக் காரணமாயிருப்பது தங்கள் உயர்குணமே யன்றி என் செயலன்று. தங்கள் கட்டளையை யான் ஏற்றுக்கொள்ள விரும்புவது ஊர்க்குருவி தன் தலையில் பனங்காயைச் சுமக்க ஒப்புக்கொள்ளுவது போலாகும். இருப்பினும், தங்கள் ஆதரவு எப்போதும் இருக்கும் என்னும் காரணத்தினால், நான் தங்கள் கட்டளையை ஏற்றுக்கொள்ளுகிறேன்," என்றார்.

இந்த முடிவுடன் அன்று அரசவை கலைந்தது. புண்ணியகோட்டி முதலியார் இரண்டு நாட்கள் வரையில் அரசரின் விருந்தினராய் இருந்து, புலவர் தேவநாதருடன் அளவளாவி மகிழ்ந்து, அரசர் கொடுத்த ஆடையாபரணங்களையும் பதினாயிரம் பொற்காசுகளையும் பெற்றுக்கொண்டு தக்கார் பாதுகாப்புடன் பல்லக்கிலேறித் தம் ஊருக்குச் சென்றார்.

சில ஆண்டுகள் சென்றன. புண்ணியகோட்டி முதலியார் மேலும் அரசர் கொடுத்த இரண்டு கிராமங்களுக்குச் சொந்தக்காரரானார்.

காணார், கேளார், கான்முடப் பட்டோர், தீப் பிணியாளர் முதலியவர்கள் ஏழைகளாய் இருப்பின் அவர்களுக்கு முதலியாரின் உதவி நிச்சய

மாகக் கிடைத்து வந்தது; உழைப்பதற்கு உடலில் வலிவற்ற ஏழைகளும், வேலை கிடைக்கப் பெருத எளியவர்களும் காப்பாற்றப்பட்டார்கள்; ஆதர வற்ற குழந்தைகளும் பெண்டிரும் அவர் ஆதரவைப் பெற்றனர்.

'நன்ருக வாழ்ந்து காலமாறுதலால் எளியவர் களாயிருப்பவர்கள் தம்மிடம் வந்தால் தங்களுக்கு வேண்டியவைகளை வாய் திறந்து கேட்க வெட்கப் படுவார்கள்' என்றெண்ணி அவர்கள் தங்களுக்கு வேண்டியது "எது" என்பதைப்பற்றி மணலில் எழுதுமாறு முதலியார் விசாலமான தம் வீட்டின் முற்றத்தில் மணலைப் பரப்பி வைத்திருந்தார். அவர் உதவியை நாடி வந்த பலரில் சிலருக்குப் பரப்பப் பட்டிருந்த மணல் பயன்பட்டதும் உண்டு. இதை, முதலியாரவர்களை நாடிவந்த எவரோ ஒரு புலவர் பாடிய பின்வரும் பாடலினுலுமறியலாம்.

**"நீணிலத் துறும்ஏழை மாந்தர்காள்! நீவிர்**
**வேண்டு வனஇன் புறீஇ**
**நேரில் கேண்மினவை தருவன்யா னலதும்**
**நினைவிலுன் னுமவை நவிலநீர்**
**நாணிலெத் தினமுநல்ல மனையின்முன் வாயிலில்**
**நன்மணல் மிருதி கொட்டியே**
**நாம்ப ரப்பியுமிங் கிருக்கின்ருேம் நனிநா**
**டிவந்தே அதனை யெழுதுமின்**
**காணிலங் குடனருள்வ மென்னவவன் கட்டளைப்**
**படியும் திட்ட மாகவே**
**கையினு லெழுதவுவ கையோடு பொருள்கண்**
**டளித்த பிரபு யாரெனில்?**

**பூணி லங்குமொளிர் வரநதிகு லத்தில்**
**வருபுண் யனுனதி கண்யனும்**
**புலவர் போற்றுமாக றலின்மேவு மெழில்புண்**
**யகோட்டி யாம்நல் பூபனே !"**

இவ்வாறு, புலவர் முதல் பலரும் புகழ, அறங் கிடந்த நெஞ்சினாலும் அருளொழுகு கண்ணினாலும் உயர்வுபெற்ற புண்ணியகோட்டி முதலியாரவர்கள், அறம் வளர்த்து இந்நிலவுலகில் நெடுங்காலம் வாழ்ந் திருந்தார்கள்.

★

# 3. புலவர் மனம்

**"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"** என்றார் தாயுமானவர்,

**"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும் ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்பு செயல் வேண்டும்"** என்றார் இராமலிங்க சுவாமிகள்.

இவ்வாறு பண்டுதொட்டு இன்றளவும் தமிழ் நாட்டிலே பிறந்த முற்றுந் துறந்த முனிவர்களும், பிறரும் தம் உயிரைப் போலவே உலகத்துயிர்கள் யாவும் இனிது வாழவேண்டுமென்று வாழ்த்தி வருவாராயினர். இன்று நேற்றல்ல! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் தமிழகத்தில் வாழ்ந்திருந்த மக்களிற் பலர், பெருமக்களாய்த்திகழ்ந் திருந்த செய்தியை உலகமறியும். அந்தப் பெரு மக்களிற் பலர் வள்ளல்களாகவும், பெரும் புலவர் களாகவும் திகழ்ந்திருந்தனர். பிறர் நலத்திற்காகவே அவர்கள் வாழ்ந்த வரலாற்றைப் புறநானூறு முதலிய சங்க நூல்களின் வாயிலாக நாம் இன்று அறிகிறோம்.

''தனக்கென்று வாழ்கிறவன் தரித்திரன்; பிறர்க் கென்று வாழ்பவன் தனிகன்'' என்பது ஆங்கில மொழியின் கண்ணுள்ள ஒரு பழமொழியின் மொழி பெயர்ப்பாகும். உலகானுபவமுள்ளவர்கள் அனைவரும் இந்தப் பழமொழியை 'உயர்வுடைய' தென்றே ஒப்புக்கொள்வர் என்பது திண்ணம். இந்தப் பழமொழியை நினைக்குந்தோறும் இதைக் கூறியவர் சிறந்த உலகானுபவமுள்ளவ ரென்றே

தோன்றுகிறது. அன்றியும், இப்பழமொழி தவறில்லாத கருத்தை உடையதாயு மிருக்கின்றது. ஆம்; தனக்கென்று வாழ்கிறவன் தரித்திரனேயாவான். தனிகன் என்று சொல்லப்படுகிறவன் யாவன்? தரித்திரன் என்று கூறப்படுகிறவன் யாவன்? கிடைத்த பொருளில் மன நிறைவு கொண்டு மேலும் மன மகிழ்ச்சியுடன் முயற்சி செய்கிறவர்களே தனிகராவார்கள். மன நிறைவே நிறைந்த செல்வமாகும். ஆகவே, மன நிறைவுள்ளவரே தனவந்தராவர்! அஃதில்லாதார் தரித்திரரேயாவர். மன நிறைவில்லாதவர்கள் பெரும் பொருள் மிகுதியும் வாய்க்கப் பெற்றவர்களாயினும் அவர்கள் தங்கள் எண்ணத்தினுல் தரித்திரர்களாகின்ருர்கள். மேலும், நாம் ஆழ்ந்து சிந்திப்போமாயின், பிறர்நலங் கருதி வாழ்கின்றவர்களே உண்மையில் தனிகரென்பதும் தெளிவாகும்.

பொருள் செல்வத்திலும் புகழ்ச் செல்வமே மேன்மை வாய்ந்த தென்பதை யாரே மறுப்பர்? இசைபட எஞ்ஞான்றும் வாழ்வாரே வாழ்வார், வசைபட வாழ்வதாம் மற்று. பிறர்க்கென வாழ்கின்றவர்களே இசைபட வாழ்கின்றவர்களாவார்கள். பொருளின் பயன் ஈதலாகும். ஈயாதார் இசைபட வாழ்தல் எங்ஙனம்? 'ஈவார்மேல் நிற்கும் புகழ்' 'இட்டார் பெரியோர்' என்பன போன்ற வாக்கியங்கள் புகழுக்குரியார் யார் என்பதைத் தெரிவிக்கின்றன. புகழ் நிறைந்த வாழ்க்கையினை யுடையவர்களே தனிகராவர். அழியும் பொருளினும் அழியாப் புகழே சிறந்த பொருளாகும். ஆகவே, எக்குடிப்

பிறப்பினும் யாவரே ஆயினும் பிறர் நலங்கருதி வாழ்கிறவர்களே போற்றப் பெறுகின்றார்கள். பிறர் நலங்கருதியே வாழ்ந்தமையால்தான் காந்தியடிகளுக்கு எக்காலத்திலும், எந்த நாட்டுத் தலைவருக்கும் ஏற்படாத அளவுக்குப் பெரும் புகழ் ஏற்பட்டு நிலைத்து நிற்கின்றது. தமிழ் நாட்டாரின் திலகமென நம்மிடையில் வாழ்ந்து மறைந்த தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை அவர்களின் தியாகத்தை அறியாதார் யாவர்? அவர், தம் உடல், பொருள், ஆவி மூன்றினையும் நாட்டுக்காகவே, பிறர் நலத்திற்காகவே, அர்ப்பணம் செய்த பெருந்தகையாவர். அவர் புகழுக்கு முன்னால் பிறர் நலங்கருதாத் தனவந்தர்களில் எவர்தாம் தலைநிமிர்ந்து நிற்கமுடியும்? ஆகவே, செல்வத்திற் சிறந்தது புகழ்ச் செல்வம் என்று ஐயமின்றிக் கூறலாம். அப்புகழ்ச் செல்வம் பிறர் நன்மைக்காக வாழ்கின்றவர் எவரோ அவரை அடைகின்றது.

பொருள் இல்லாத தரித்திரனும், புகழில்லாத தனவந்தனும் நாட்டில் வேற்றுமை அற்றவராகின்றனர்; ஒரே ஒரு வேற்றுமை மட்டும் உண்டு. தரித்திரனால் தான் விரும்பிய பொருளை வாங்க முடியாது; தனவந்தனால் தான் விரும்பியவற்றை ஓரளவில் பெறமுடியும். புலியும், ஓநாயும் விரும்பிய மிருகங்களை வேட்டையாடி மகிழ்கின்றன! அதனால் அவற்றிற்குப் பெருமையா? புகழா? ஒன்றுமில்லை. பிறர் நலங்கருதாத் தனவந்தர்கள் தங்கள் வரையில் தின்று களித்திருப்பதனால் யாருக்கு என்ன பயன்? ஆகவே, பிறர்நலங் கருதி வாழ்வாரே வாழ்வாராவர்.

பண்டைக்காலத்திலே தமிழகத்திலே பிறர் நலங்கருதி வாழ்ந்த பெரியோர்களைப் போலவே இடைக்காலத்திலும், மிகவும் பிற்காலத்திலும் பிறர் நலங்கருதி வாழ்ந்த பெரியோர்கள் பலர் இருந்தார்கள் என்பதைச் சங்க நூல்களுடன் பிற நூல்களையும் கற்றவர்கள் அறிவார்கள். அவர்களிற் பலரைப்பற்றித் தமிழுலகம் இன்று பெரும்பாலும் மறந்துவிட்டது. அப்படி நம்மனோரால் ஒருவாறு மறக்கப்பட்டவர்களில் ஒருவர் சுமார் நூற்றுப்பதின் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்து வாழ்ந்திருந்தவரான மாம்பழக் கவிச் சிங்க நாவலராவர். இவர் எவ்விதக் கவியையும் விரைந்து பாடுவதில் வல்லவர். இவர் சேர சோழ பாண்டிய மன்னர்களுக்குப் பின்னர், புலவர் பெருமக்களை ஆதரிப்பதிலே சிறந்து விளங்கிய சேது மன்னர்களின் வழி வந்தவராகிய 'புலவர் பாதுகாவலர்' எனப் பெயர் பெற்ற பொன்னுச்சாமி தேவரவர்களின் ஆஸ்தான புலவராய் அமர்ந்திருந்தவராவர்.

பெரும் புலமையும், பேரறிவும் பெற்றவர்களாகிய மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் சிறந்த குணம் படைத்தவர்களாவர்; தம் புலமையையே முதலாகக் கொண்டு நாவலரவர்கள் தம் வாழ்க்கையை நடத்தி வந்த போதிலும், சமயம் நேர்ந்த பொழுதெல்லாம் பிறர்க்குதவும் பெருந்தன்மையினராகவே வாழ்ந்து வந்தார்கள்.

நாவலரவர்கள் பிறந்த ஊர்,

**"அன்ன மளிக்குமூர் அண்டினரைக் காக்குமூர்**
**சொன்ன மழைபோற் சொரியுமூர்-உன்னினர்க்குத்**

**தீதுபிணி தீர்க்குமூர் செவ்வே ளிருக்குமூர்**
**ஓது திருப்பழநி யூர்''**—என்பர்.

நாவலரவர்கள் தமக்கு அம்மை வார்த்தமையினுல், இளம்பருவத்தினராய் இருந்தபோதே, தம்மிருகண் பார்வையையும் இழந்தார்கள். நாவலரவர்கள், இரட்டைப புலவர்களில் ஒருவரைப் போலவும், யானைக்கன்றும், வளநாடும் பரிசுபெற்ற அந்தகக் கவி வீரராகவ முதலியாரவர்களைப் போலவும், செட்டிநாட்டுத் தனவணிக மரபினரான வன்ரெுண்டன் செட்டியாரவர்களைப் போலவும், வங்க நாட்டின் தங்கப் புலவரென்று சொல்லப்படும் சுபோத சந்திர ராய் என்பவரைப் போலவும் கண் பார்வையை இழந்தனராயினும் அறிவுப் பார்வையை இழக்கவில்லை. ஆகவே, நாவலரவர்கள் கல்விக் கடலில் வீழ்ந்து நீந்திக் கரைசேர்ந்து கவி பாடுவதில் வல்லவராய் இருந்தார்கள். இவர்களின் புகழ் திக்கெட்டும் பரவியது. இவர்களின் மாணுக்கர் பலர் கல்வியில் வல்ல்வராயினர். அறிஞரும் பிறரும் இவர்களை அணுகிப் பெருமை பெற்றனர். விஸ்வகன்மா வகுப்பிலே, சித்திர வேலையிலே தேர்ந்தவர்களின் மரபிலே வந்த இவர்கள் கவிச்சித்திரத்திலே வல்லவர்களாய் இருந்தார்கள். புலமை மிக்க இவர்களைப் பெருமக்கள் பலரும் புகழ்ந்தனர்.

நாவலரவர்கள் தமிழறிவும், கற்ருேரைப் போற்றும் கவின் பெருங்குணமும் வாய்ந்த வள்ளல் ஒருவரின் ஆஸ்தானப் புலவராக அமர்ந்து தமிழ் மொழியை வளர்க்க விரும்பிஞர்கள்.

"முன்னாளிலே, புலிக் கொடியுடைய சோழர் சபையிலும், மீனக் கொடி யேந்திய பாண்டி நாட்டரசர்கள் பட்டி மண்டபங்களிலும், விற்கொடியினை யுடைய சேர மன்னர்களின் சிறப்புறு அவையிலும் புலவர் பெருமக்கள் பெருஞ் சிறப்புடன் அமர்ந்திருந்தார்கள். கவிஞர் திலகராகிய ஒட்டக்கூத்தர் தமிழ் வளர்த்த பெரு வேந்தர்களாகிய விக்கிரம சோழன், இரண்டாங் குலோத்துங்கன், இராசராச சோழன் ஆகிய சோழர்கள் அவையிலும், கவிச் சக்கரவர்த்தி எனப்படும் கம்பநாடர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாரின் சமஸ்தானத்திலும், பாட் டாலுயர்ந்த புகழேந்திப் புலவர் பாண்டி மன்னர் திருச்சபையிலும், பாரதம் பாடிய வில்லிபுத்தூரர் வக்கபாகை வரபதி ஆட்கொண்டான் அவையிலும், பொய்யா மொழிப் புலவர் கண்டியூர்ச் சீநக்கப் பிரபுவின் திருமாளிகையிலும் ஆஸ்தானப் புலவர்களாய் அமர்ந்திருந்தனரென்பது பழைய வரலாறுகளால் அறியக்கிடக்கின்றது. தொன்று தொட்டுவரும் இம்முறையைப் பின்பற்றியே சேதுவேந்தர்களும் வாழையடி வாழையாய்த் தமிழ்வல்ல புலவர்களை ஆதரித்து வந்தார்கள். தம் முன்னோர்களின் அடிச்சுவடு தழுவி ஸ்ரீமான் பொன்னுச்சாமித் தேவரவர்களும் பழனி மாம்பழக் கவிச் சிங்க நாவலரவர்கள் தமது சமஸ்தானப் புலவராக இருக்க விரும்பினார்கள். தமிழறியும் அருமையும், தகுதியறிந்து பரிசளிக்கும் தன்மையு முள்ள தேவரது விருப்பத்திற்குக் கவிராயர் மாறு

கூறுது சம்மதித்துத் தேவரது சமஸ்தானப் புலவ ராக இருந்து வரலானுர்!''

இவ்வாறு நாவலர் பொன்னுச்சாமித் தேவரவர்களின் ஆஸ்தானப் புலவராக இருந்து வந்த காலத்தில், அவர், தம் வாழ்க்கையை மட்டும் கவனித்துக் கொண்டிருக்கவில்லை. தம்மைச் சார்ந் தவர்களையும், தம் முயற்சியினுல், உண்ண உணவும் இருக்க இடமும் பெறும்படி செய்துவந்தார். இத் தகைய நற்குணங் காரணமாகவும் அவரது கல்விப் புலமை நாடெங்கும் பரவியது. நாவலரவர்கள் தமக்கென்று மட்டும் வாழவில்லை; பிறருக்காகவும் வாழ்ந்தார்கள்.

பொன்னுசாமித் தேவரவர்களின் ஆஸ்தா னப் புலவராக மாம்பழக் கவிச் சிங்க நாவலரவர் கள் இருந்த காலத்தில் ஒருவாறு தமிழைக் கற்ற பிராமணர் ஒருவர் ஒரு பாடலை ஓர் ஏட்டில் எழுதி எடுத்துக்கொண்டு தேவரவர்களிடம் பரிசுபெற்றுப் போகலாமென்று வந்தார். வந்தவர், ஆஸ்தானப் புலவராகத் தேவரவர்களிடம் நாவலர் அவர்கள் இருப்பதையும் பிறர் சொல்லக் கேட்டறிந்தார். 'நம் கவியை நாம் சொல்லும்போது நாவலரவர்கள் என்ன சொல்லுவார்களோ' என்னும் அச்சம் அவரைப் பற்றிக் கொண்டது. ஆகவே, அவர் 'தேவரவர்களைப் பார்ப்பதற்கு முன்னுல் நாவலரவர் களைப் பார்ப்பது நல்லது' என்று நினைத்தார். உடனே, அவர் நாவலரவர்கள் இருக்குமிடத்தைக் கேட்டறிந்து அங்குச் சென்ருர், அங்கு நாவலரும்

அவர் இடும் குற்றேவல்களைச் செய்யும் சிறுவன் ஒருவனும் இருந்தனர்.

கண் பார்வை அற்றவராயினும் நாவலரவர்கள் வந்தவரின் காலடி ஓசையைக் கேட்டு, "யார் ?" என்று வினவினர்.

"யாரோ ஓர் ஐயர்" என்றான் பக்கத்தில் இருந்த சிறுவன்.

"ஐயா அவர்களைப் பார்த்துப் பேசிப் போக லாம் என்று வந்தேன். என்பெயர் சுவாமிநாதன் என்பது" என்றார் வந்தவர்.

உடனே நாவலரவர்கள், "வரவேண்டும். என் எதிரில் மணை இருக்கும். அதன்மீது உட்கார லாம்" என்று சொல்லி "பையா" என்றார். உடனே அவர் பக்கத்தில் இருந்த சிறுவன் "தங்கள் எதிரில் மணை இருக்கிறது" என்று சொன் னான்.

"இதோ உட்காருகிறேன்" என்று சொல் லிக் கொண்டே ஐயரவர்கள் நாவலரவர்களின் எதி ரில், மணையின்மீது, உட்கார்ந்தார்கள்.

உடனே புலவர், "பையா! நீ சற்று வெளி யில்போய் இரு" என்று சொல்லிவிட்டு ஐயரை நோக்கி, "தாங்கள் என்னை நாடி வந்தமைக்குரிய காரணம் யாதோ ?" என்று கேட்டார்.

உடனே ஐயரவர்கள் நாவலரவர்களை நோக்கி, "புலவர் மணிகளே,

**'பொங்குகடல் வாழி புயல்வாழி சீர்வாழி
தங்குநூல் வாழி தமிழ்வாழி—துங்கமிகுந்
தேசமெங்கும் போற்றத் திறல்படைத்த வேம்பத்தூர்
மாசனங்கள் வாழி மகிழ்ந்து'**

என்று தங்களால் புகழ்ந்து பாடப்பட்ட வேம்பத்தூரில் வாழுகின்ற மக்களிலே அடியேனும் ஒருவன். அடியேனுக்குக் கொஞ்சம் தமிழ் தெரியும். ஏதோ ஒருவாறு கவியும் இயற்றுவேன்...'' என்று சொல்லி மேலே ஏதோ சொல்லப் போகையில், நாவலரவர்கள் ஐயர் வார்த்தையில் குறுக்கிட்டு, ''ஓ! தாங்கள் வேம்பத்தூரில் இருப்பவர்களா! மிகவும் மகிழ்ச்சி! நான் வேம்பத்தூரின் வழியே இங்கு வரும்போது அவ்வூரில் தமிழ்ப் புலமை மிக்கார் வாழ்வதை அறிந்து அவர்களை எண்ணியே இப்போது தாங்கள் கூறிய வெண்பாவைப் பாடினேன். தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறவர் எவரேயாயினும் அவரிடம் எனக்கு அளவு கடந்த பற்று உண்டு. வேம்பத்தூரிலே பல புலவர் பெருமக்கள் வாழ்ந்திருந்தார்கள். திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் பாடிய பெரும்பற்றப் புலியூர் நம்பிகள், பாகவத புராணமியற்றிய செவ்வைச் சூடுவார், தமிழ் வாசிட்ட இராமாயணம் ஓதிய ஆளவந்தார், சவுந்திரியலகரி இயற்றிய கவிராச பண்டிதர், நெல்லைக்கோவை பாடிய பெருமாளையர், சிலேடைப்புலி பிச்சுவையர், அழகர் கலம்பகம் இயற்றிய விஸ்வகர்மப் புலவர் கவிக்குஞ்சர பாரதியார் முதலியவர்கள் வேம்பத்தூரில்

தோன்றியவர்களே ஆவர். ஆகவே, இன்றும் அவ்வூரில் உள்ள எக்குலத்தவரும் தமிழ் நலங் கருதுகிறவர்களாகவே இருக்கின்றனர்'' என்று கூறி மறுபடியும் சுவாமிநாதையரை நோக்கி, "உங்கள் ஊர்மீது எனக்குள்ள ஆர்வத்தினால் நான் தங்கள் வார்த்தையில் குறுக்கிட்டு ஏதோ பேசிவிட்டேன். நீங்கள் பின்னும் சொல்லவேண்டிய செய்திகளைச் சொல்லலாம்,'' என்றார்கள்.

உடனே ஐயர் நாவலரை நோக்கி, "யான் கூச்சமின்றிக் கூறக் கூடியவைகளைக் கூறிவிட்டேன். இனி யான் கூறவேண்டியவைகளை எவ்வாறு கூறுவதென்றெண்ணித் தயங்குகிறேன்......" என்று வினயந்தோன்றக் கூறினார்.

"என்னை உங்கள் மனிதர்களிலே ஒருவனாகக் கொள்ளலாம். தயக்கமின்றித் தாங்கள் தங்கள் மனத்திலுள்ள செய்தியை என்னிடம் சொல்லலாம்,'' என்றார் நாவலர்.

நாவலரின் இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் ஐயர் பெரு மகிழ்ச்சி கொண்டு நாவலரை நோக்கி, "தங்களைப் போன்ற பெருங்குணம் படைத்தவர்களைக் காண்பது அரிது. தங்கள் ஆதரவைப் பெற முடியும் என்றுதான் நான் இங்கு வந்தேன். நான் தனிகனல்லன். ஏதோ இருக்கும் இரண்டு 'ஏக்கர்' நிலத்தை வைத்துக்கொண்டு நித்திய தரித்திரனாகவே காலங்கழித்து வருகிறேன். இப்போது என் முதற் பெண்ணுக்குக் கலியாணம் நடைபெற வேண்டும். 'பணம், பணம் என்று பணத்தைத்தேடி அலைகிறவர்களில் பலருக்குப் பணம் கிடைக்காதபோது

தமிழைப்படித்துப் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கும் நமக்கு எங்கிருந்து பணம் கிடைக்கப் போகிறது' என்று நான் கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில், என் நண்பரொருவர், நம் தேவரவர்களை நெருங்கிக் கவிபாடினுல் பொருள் கிடைக்குமென்று கூறினுர். பணம்பெற ஒரு வழியையும் தெரிந்து கொள்ளாதிருந்த யான் என் நண்பர் கூறிய வழியே நல்வழியெனக் கருதி ஒரு கவியை எழுதிக்கொண்டு இங்கு வந்தேன். இங்கு வந்தவுடன் தங்கள் அருமை பெருமைகளைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தங்களைப் பார்த்துத் தங்கள் கருத்துப்படி நடக்கலாம் என்று தங்களிடம் வந்தேன். இவ்வளவுதான் என் செய்தி. இனி, தாங்கள் காட்டும் வழியில் செல்ல யான் சித்தமாய் இருக்கிறேன்'' என்று சொன்னுர்.

'மகள் திருமணம்' 'தமிழ் கற்றவர்களுக்குப் பொருள் எங்கிருந்து கிடைக்கப்போகிறது' என்னும் வார்த்தைகள் நாவலரின் மனத்தை உருக்கி விட்டன. உடனே அவர்கள் ஐயரை நோக்கி, ''ஐயா, நீங்கள் கவலைப்படவேண்டா. தமிழைக் கற்றவர்களுக்கு வாழ்வில்லையானுல், இந்தத் தமிழ்நாடு வாழ முடியாது. தங்கள் தலைமகள் கலியாணத்தை நடைபெறச் செய்யத் தேவரவர்கள் உதவும்படி நான் தேவரவர்களிடம் கூறுகிறேன். தாங்கள் கவலைப்படவேண்டா. தமிழ் மொழியைக் கற்றவர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளாவிடில் நமக்கு வேறு யார் துணைவருவார்கள்'' என்று சொல்லி வார்த்தையை நிறுத்திய

நாவலரவர்கள் மீண்டும் ஐயரவர்களை நோக்கி, ''இப்போது தாங்கள் எழுதிவந்துள்ள கவியைப் படியுங்கள்; கேட்போம்.'' என்று சொன்னார்கள்.

''யான் சாதாரணத் தமிழறிவுள்ளவன். தாங்களோ கல்விக் கடல்; கலைமகள் இருப்பிடம்; கவி மாரி பொழியும் மேகம். தங்களுக்கு முன்னே யான் எழுதிய கவியைப் படிப்பதென்றால் அச்சமாகத்தான் இருக்கிறது''. என்று ஐயர் கூறினார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட நாவலரவர்கள் ''எல்லா மறிந்தவரும் இல்லை; ஏது மறியாதவரும் இல்லை. கல்வித் துறையில் யாம் பெரிதும் வல்லோமென்று வலிமை பேசுகிறவர் கசடரே யாவர். எல்லோர்க்கும் ஒவ்வொன்றெளிது தாமரைமலர் இருக்கின்ற குளத்திலே கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் இல்லையா ? அவைகளும் ஏதோ காரணத்துடன்தானே தோன்றி இருக்கின்றன. எல்லாக் கவிஞர்களும் ஆரம்பத்திலேயே இணையற்ற கவிஞர்களாய் விளங்கிவிட முடியுமா ? 'கவிச் சக்கரவர்த்தி' என்று பெயர்பெற்ற கம்பரால் ஆரம்ப காலத்தில் பாடப்பெற்ற 'ஏர் எழுபது' என்பது போன்ற நூற் பாடல்கள் பிற்காலத்தில் அவரால் பாடப்பெற்ற இராமாயணப் பாடல்களைப் போலச் சொல்லழகில் சிறப்புற்றிருக்க வில்லையே ! ஆகவே, தாங்கள் சிறிதும் தயங்காமல் தங்கள் கவியைச் சொல்லுங்கள்'' என்றுரைத்தார்.

நாவலரவர்களின் தேற்றவுரைகளைக் கேட்ட ஐயர் அச்சம் நீங்கப்பெற்று, நாவலரவர்களின் பெருங்குணத்தை அறிந்து மனமகிழ்ச்சியுற்று

'யான் வழிபடு கடவுளே என்னைத் தங்கள்பால் சேர்த்தது. தங்கள் சொற்கள் என் மனத்தில் இருந்த அச்சத்தைப் போக்கித் தைரியத்தை அளித்தன. யான், இனி என் புன்கவியைத் தங்கள் முன்னே படிக்கின்றேன்'' என்று கூறித் தம் கவி எழுதப் பெற்றிருந்த கடிதத்தை எடுத்துப் பிரித்து,

**"வீதிதொறு மாடஞ் சிறக்க விளங்கிடுதென்**
**புதுவை வாழும்**
**நாதியிலை எனவந் தார்க்கு நல்குபொன்னுச்**
**சாமி வேந்தே!**
**சேதியொன்று செப்புக் கேளும் செகத்தினிற்பற்**
**பலரைப் பாடி**
**பாதிவலி குன்றி னேற்குப் பரிசுமிக**
**அருளு வாயே!"**

என்று படித்து முடித்தார்.

இக்கவியைக் கேட்ட நாவலரவர்கள் சற்றுப் புன்சிரிப்புக் கொண்டு, "ஐயரவர்கள் இப்போது தான் பாடலியற்றப் பழகுகிறார் போலும்!'' என்றெண்ணிப் பின்னர் ஐயரவர்களைப் பார்த்து, "கவி மிகவும் உயர்தரமானது என்று சொல்ல முடியா விட்டாலும் தாங்கள் சொல்லத் தயங்கியதற் கேற்றபடி தாழ்வானதன்று, எளிதில் பொருள் விளங்கும்படி இருக்கின்றது. பாக்கள் இப்படித் தான் இருக்கவேண்டும். இருந்தாலும், தங்கள் கவியின் முதலடியில் உள்ள "வீதிதொறு மாடஞ் சிறக்க'' என்னும் தொடரை மட்டும் "வீதிதொறும் மாடகூடம்'' என்று திருத்திக் கொள்ளுங்கள்.

இல்லாவிடில் ''வீதிதொறும் மாடு ஐந்து இறக்க'' என்றும் பொருள்படலாம்,'' என்று கூறினர்.

உடனே, ஐயர் திடுக்கிட்டுத் தம் பாடலை நாவல ரவர்கள் கூறியபடி திருத்திக்கொண்டார்.

பின்னர் நாவலர் ஐயரை நோக்கி, ''நீங்கள் எங்கே எப்போது சாப்பிட்டீர்களோ? தாங்கள் வந்தவுடன் நான் முதலில் அதைப்பற்றித் தங் களைக் கேட்டிருக்க வேண்டும். நம் உரையாடலினுல் யான் அதை மறந்தேன்,'' என்ருர்.

''பக்கத்து ஊரில் நான் ஒரு பிராமணன் வீட்டில் சாப்பிட்டு வந்தேன். இப்போது ஆகாரம் தேவை இல்லை. இன்றிரவு நான் இங்கிருப்பதாஞல் ஆகாரத்தைப பற்றி நினைக்க வேண்டும்,'' என்ருர் சுவாமிநாதையர்.

''நாளையதினம் காலையில்தான் நாம் தேவரவர் களைப் பார்க்க முடியும். அன்றியும், அவர் காலை ஆகாரம் செய்தவுடன் அவரைப் பார்ப்பது காரிய சித்திக்கு அனுகூலமாகும். ''ஞாலங் கருதினுங் கைகூடும், காலங்கருதி இடத்தாற் செயின்'' என் னும் பொன் மொழி நன்மொழி அன்ருே! தாங்கள் இங்கேயே தங்கி இருங்கள். பக்கத்தில் உள்ள தெருவில் என்னிடம் பெரிதும் அன்புள்ள பஞ்சு ஐயர் என்பவர் ஒருவர் இருக்கிருர். அவரிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் அவர் வீட்டில் சாப்பிட்டுக்கொள்ளலாம்'' என்ருர் நாவலர்.

முன்னல் பழக்கமில்லாத தம்மிடம் நாவலர். இவ்வாறு அன்புடன் நடந்து கொள்ளுவதை

நினைக்கும்போ தெல்லாம், நாவலரைப் பற்றிய நன்மதிப்பு ஐயரவர்கள் மனத்தில் அதிகரித்தது.

பின்னர், ஆள் ஒருவனை அனுப்பி, நாவலர், பஞ்சு ஐயரை வரவழைத்து, அவருக்குச் சுவாமி நாதையரை அறிமுகப் படுத்தி, அவரை வரவழைத் தமைக்குரிய காரணத்தையும் கூறினார்.

உடனே பஞ்சு ஐயர், "தமிழ் மொழியில் எனக்குத் தனி மதிப்பு உண்டு. என் தகப்பனார் ஒரு தமிழ்ப் புலவர். நான்தான் அவர் வழியில் செல்லவில்லை. இருப்பினும், தமிழ்ப் புலவர் களைக் காணுந்தோறும் எனக்கு என் தகப்பனாரு டைய நினைவு வராமல் இருப்பதில்லை. 'நாம் எந்த மொழியைப் பேசிப் பிழைக்கிறோமோ அந்த மொழியை வளர்க்கும் புலவர்களுக்கு நாம் மதிப்புத் தரவேண்டும். அதுவே நன்றி மறவாத செயலாகும்' என்று என் தகப்பனார் பல முறை என்னிடத்திலும் சொல்லி இருக்கின்றார். ஆகவே, இவர்மட்டுமல்ல! வேறு தமிழ்ப் புலவர் எவர் வரினும் அவருக்கும் நான் ஆகாரம் படைக்கச் சித்தமாய் இருக்கின் றேன்'' என்று அன்பு வழியுமாறு கூறினார்.

"தாங்கள் புலவர்களிடத்தில் பெருமதிப் புள்ளவர்கள் என்பதைக் கருதியே யான் தங்களை வரவழைத்து இதைக் கூறினேன். புலவரைப் போற்றும் தங்கள் பெருந்தன்மையை உலகம் மறவாது'' என்று நாவலர் பஞ்சு ஐயரைப் பார்த்துக் கூறினார்.

பின்னர் பஞ்சு ஐயர் நாவலரிடம் விடை பெற்றுக்கொண்டு சுவாமிநாதையரைத் தம்முடைய

இல்லத்திற்கு வேண்டி அழைத்துச் சென்று சீடையும், முறுக்கும் கொடுத்து அவரைத் தின்னச் செய்து நீர்மோர் கொடுத்து உபசரித்தனுப்பினர்.

அன்றிரவு உண்ட பிறகு நாவலரவர்களும், வேம்பத்தூரரையரவர்களும் வெகுநேரம் வரையில் உரையாடிக்கொண்டிருந்து பின்னர் கண்ணயர்ந்தார்கள்.

மறுநாட்காலையில் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு நாவலரும், ஐயரும் காலை ஆகாரம் உட்கொண்டு புலவர் போற்றும் பொன்னுச்சாமித் தேவரவர்களைக் காணச் சித்தமாயினர்.

''தேவரவர்கள் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு ஆஸ்தானத்தில் இருந்து வெற்றிலைப் பாக்குத் தரித்துக்கொண்டிருக்கின்றார்கள்'' என்று சமயமறிந்து வருமாறு அனுப்பப்பட்ட சிறுவன் வந்து நாவலரவர்களிடம் கூறினன்.

'இதுதான் சமயம்' என்று நாவலர் சால்வையை எடுத்துத் தம் உடம்பின் மீது போர்த்திக்கொண்டு, சிறுவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, அவன் வழிகாட்ட, வேம்பத்தூரார் பின்தொடர, தேவர் இருக்கும் ஆஸ்தானத்தை நோக்கி நடக்கலானர்.

போகுமுன் நாவலர் ஐயரைப்பார்த்து, ''நான் படியுங்கள் என்று சொன்னவுடனே தாங்கள் எழுதியுள்ள கவியை இசையுடன் நிறுத்திப் படியுங்கள். தேவரவர்கள் சிறந்த கல்விமான். ஆகவே, அவர் கேட்கும் கேள்விக்கு மட்டும் பொருத்தமான பதிலை அளவறிந்து சொல்லுங்கள்'' என்றார்.

"ஆகா, அப்படியே" என்றார் சுவாமிநாதையர்.

நாவலரவர்களுக்குத் தேவரவர்களிடம் நல்ல செல்வாக்கு உண்டு. தேவரவர்களின் இயல்பறிந்து அதற்கேற்ற வண்ணம் நாவலர் நடந்து வந்தமையினால் தேவர் நாவலரவர்களிடம் நன்மதிப்பு வைத்திருந்தார். நாவலர் ஐயருடன் சென்றபோது தேவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுப்பவனைத் தவிர வேறு ஒருவரும் ஆங்கில்லை.

நாவலரைக் கண்டவுடன் தேவரவர்கள் எழுந்து நின்று, "வரவேண்டும், வரவேண்டும்," என்று வரவேற்று அவரையும், ஐயரையும் தம் எதிரில் இருந்த இருக்கைகளில் இருக்கச் செய்து தாமும் உட்கார்ந்து, "எனக்கு இன்றைக்கு ஓய்வுதான், தங்களுடன் உரையாடிக்கொண்டிருக்கலாம் என்று விரும்பினேன். தாங்களே வந்துவிட்டீர்கள். அன்புமிக்க இருவரில், ஒருவர் மற்றொருவரை நினைத்தால், அந்த மற்றொருவருக்கும் தன்னை நினைப்பவரைப் பற்றிய நினைவு தோன்றும் போலிருக்கிறது" என்று கூறினார்.

"உளநூற் புலவர்கள் சொல்வதும் அப்படித்தான்', என்றார் கவிராயர்.

"தங்களுடன் வந்திருப்பவர்கள் இந்த ஊரில் இருப்பவர்களல்லர்போலும்,' என்றார் தேவர்.

"இவர்களைத் தங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவே இந்த நேரத்தில் இங்கு வந்துளேன்" என்றார் நாவலர்.

"மகிழ்ச்சி" என்றார் தேவர்

பின்னர், நாவலர் தேவரை நோக்கி, "இவர்கள் பெயர் சுவாமிநாதையர் என்பது; நல்ல தமிழறிஞர்; தமிழுக்கு உபகாரம் செய்த பெரும் புலவர்கள் பலர் பிறந்த வேம்பத்தூரில் பிறந்தவர்கள்; கவி புனைவதிலும் கருத்துள்ளவர்கள். இவர்கள், தங்களுடைய புலவர் போற்றும் பெருங்குணத்தைக் கேள்வியுற்றுக் கையுறையாகத் தங்கள் சம்பந்தமாக ஒரு கவி இயற்றிக்கொண்டு தங்களைக் காண வந்திருக்கின்றார்கள். தங்கள் சம்பந்தமாக இவர்கள் இயற்றியுள்ள கவியின் இறுதிப் பகுதி இவரிடத்தில் எனக்கு இரக்கத்தை உண்டாக்கியது. இவர்களைப் போன்றவர்களைத் தாங்கள் ஆதரிப்பது தகுதிக்குரிய செயலும், புகழுக்குரிய செயலுமாகும்" என்றுரைத்தார்.

நாவலரவர்களின் நல்லுரையைக் கேட்டவுடன் தேவரவர்கள் அகமிக மகிழ்ந்து, முகமலர்ச்சியுற்று, "இவர்கள் வேம்பத்தூரைச் சார்ந்தவர்களா! மகிழ்ச்சி. வேம்பத்தூர், புலவர் பெருமக்களின் பிறப்பிடம் என்பதைத் தமிழுலகம் அறியுமே! தங்கள் விருப்பத்தைப்பெற்ற இவர்கள் தக்காராகவே இருத்தல் வேண்டும். இவர்கள் இயற்றிய கவியை இவர்கள் படிப்பதற்கு இது ஏற்ற நேரந்தான்," என்று கூறினார்கள்.

தேவரவர்கள் எவரும் தம்மைப் பலர் முன்னிலையில் புகழ்வதை விரும்பாத பெருங்குணம் படைத்தவர்கள்; ஆகவே, தாம் தனித்திருக்கையில் தம்மைப் பற்றி ஐயரவர்கள் இயற்றியுள்ள கவியைக் கேட்க விரும்பினார்கள்.

தேவரவர்களின் விருப்பத்தைத் தெரிந்து கொண்ட நாவலரவர்கள், கவியைப் படித்துத் தேவரவர்களிடம் கொடுக்கும்படி ஐயரிடம் கூறினர்கள். உடனே ஐயரவர்கள் கடிதத்தை எடுத்து அதில் எழுதப்பெற்றிருந்த தேவர் சம்பந்தமான கவியை இசையுடன் நன்ருகப் படித்துப் பின்னர் கவியையுடைய கடிதத்தைத் தேவரவர்களிடம் கொடுத்தார்கள். தேவர் அதை அன்புடன் ஏற்றுக் கொண்டார்.

ஐயருடைய கவியைக் கேட்டவுடனே தேவரவர்கள் ஐயரது கல்வியின் நிலையை உணர்ந்து கொண்டார். ஆயினும், தமிழ்க் கற்றவர்கள் யாவரேயாயினும் அவர்களை உயர்த்த வேண்டுமென்னும் கருத்துள்ள தேவரவர்கள், **'செகத்தினில் பற்பலரைப் பாடிப் பாதிவலி குன்றி னேற்குப் பரிசுமிக அருளுவாயே'** என்னும் தொடரிலுள்ள 'பாதிவலி குன்றினேற்கு' என்னும் வாக்கியத்தினுல் மனமுருகப்பெற்று, 'ஐயருக்கு உதவவேண்டு'மெனத் தீர்மானித்தார்.

ஆகவே, தேவர் நாவலரைநோக்கி, "இவருக்குப் பரிசுதரத் தடை யாதொன்றுமில்லை; ஆனல் நெடுந்தூரமிருந்து வந்துள்ள இவர்கள் சாதாரண நோக்கத்துடன் வந்திருக்கமாட்டார்கள் அல்லவா ?" என்று கேட்டார்.

"தமிழ்நல முணர்ந்த தாங்கள் பிறர் நிலையையும் உய்த்துணரும் பேரறிஞர்களாய் விளங்குகிறீர்கள். ஆகவே, பழுமரம் நாடிச்செல்லும் பறவைகளைப் போலப் புலவரும் பிறரும் தங்களை நாடித் தேடி ஓடி

வருகின்றனர். ஐயரவர்களின் தலை மகளுக்குத் திருமணம் நடைபெற வேண்டும்! கையில் பொருளில்லை! கலியாணமோ நடைபெற்றாக வேண்டும். தங்கள் குணநலன்களை அறிந்தார் எவரோ ஒருவர் இவரைத் தங்கள்பால் வருமாறு தூண்டியுள்ளார். இவர் முழு நம்பிக்கையுடன் இங்கு வந்து என் துணை கொண்டு தங்கள் சமூகத்தை அடைந்துள்ளார்'' என நாவலர் நவின்றார்.

உடனே தேவர் ஐயரைப் பார்த்து, ''கலியாணத்திற்கு எவ்வளவு ரூபாய் செலவாகும்?'' என்று கேட்டார்.

ஐயர் பதில் சொல்லாமல் தயங்கினார்.

''கவலைவேண்டா; நினைப்பதைச் சொல்லுங்கள்'' என்றார் தேவர்

''ஓர் ஐஞ்ஞூறு, ரூபாய் செலவாகும்'' என்றார் ஐயர்.

''அவ்வளவுகூட இல்லாமல் ஒரு கலியாணத்தை நடத்த முடியாதே!'' என்றார் நாவலர்.

''அந்தத் தொகை எப்பொழுது வேண்டும்? தாங்கள் எப்போது ஊருக்குப் போகப் போகிறீர்கள்?'' என்று தேவர் கேட்டார்.

''இவர் எப்பொழுது வேண்டுமானாலும் செல்ல ஆயத்தமாய் இருக்கின்றார். ஆனால், தங்கள் விருப்பம்போலத் தாங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் இவரை அனுப்பலாம்'' என்றார் நாவலர்.

''நாளைக்குச் செல்லலாமே'' என்றார் தேவர்.

''ஆகா, அப்படியே நடந்து கொள்ளுகிறேன்'' என்றார் சுவாமிநாதையர்.

"இவர் சாப்பாட்டுக்கு நம் பஞ்சு ஐயர் வீட்டில் ஏற்பாடு செய்யலாமே" என்றூர் தேவர்.

"நம் பஞ்சு ஐயர் வீட்டில்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது" என்றூர் நாவலர்.

"ஆகும் செலவை நமது அரண்மனைக் கணக்கப்பிள்ளையிடமிருந்து பெற்றுக்கொள்ளச் சொல்லுங்கள்" என்றூர் தேவர்.

"சொல்லுகிறேன்" என்றுரைத்து நாவலர் மௌனமாய் இருந்தார். அப்போது தேவர் நாவலரவர்களைப் பார்த்து, "என்ன நினைக்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

உடனே நாவலர், "தங்கள் பெருங்குணத்தைப் பற்றி நினைப்பதைத் தவிர வேறு எதை நான் நினைக்கப்போகிறேன்," என்று கூறி மறுபடியும் தேவரை நோக்கி, "ஐயரவர்களுக்கு அருள்கூர்ந்து விட்டமைக்காக யான் பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன். ஒரு திருமணம் நடைபெறுவதற்கு உதவி செய்த தங்கள் குடும்பத்தில் ஆயிரமாயிரம் திருமணங்கள் நடைபெற வேண்டும். இதுவே என் எண்ணம்" என்று கூறினூர்.

"தங்கள் உதவியை யான் மட்டுமன்று; என் குடும்பத்தினரும் என்றென்றைக்கும் மறந்துவிட முடியாது. தங்களைப் போன்ற புரவலர்களிருப்பதனூற்றான் உலகம் நடைபெறுகின்றது. இதைத் தவிர யான் ஒன்றும் கூறத்தெரியாதவனுய் இருக்கின்றேன். தங்கள் பெருமையைத் தங்களைக் காணூத விடத்தில்தான் யான் கூறவேண்டும்"

என்று தேவரவர்களைப் பார்த்துக் கூறினர் சுவாமி நாதையர்.

ஐயரவர்களும், நாவலரும் மாறி மாறித் தம்மைப் புகழ்வதால் சற்றுக் கூச்சமுற்ற தேவர், நாவலர் எண்ணத்தை வேறுவழியில் திருப்புவதற்காகவும், நாவலர் அவர்களின் கல்வித்திறத்தை ஐயரவர்கள் உணரவேண்டும் என்பதற்காகவும் நாவலரை நோக்கி, "புலவர் பெரும! நேற்றிரவு யான் நெடுநேரம் வரையில் திருப்புகழ் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் மனத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. அதை உங்களிடம் உரைக்கலாமெனக் கருதினேன். அதாவது:—திருப்புகழில் காணப்படும் 'முத்தைத் தரு' என்னும் தொடக்கத்தில் உள்ள 'முத்தை' என்னும் வார்த்தை முதலாக 'ஓது' என்பதுவரையில் உள்ள பகுதியை ஓர் வெண்பாவில் அமையும்படி பாடுங்கள்," என்று கூறினர்.

அப்பொழுதே நாவலர் தேவரவர்களைப் பார்த்து, "புரவலரேறே! தாங்கள் கூறிய திருப் புகழ்ப் பகுதியே வெண்பா இலக்கணத்திற்கு ஏற்ப அமைந்திருக்கின்றது. ஆனல், '**வரமுதவிக் காக்கு மனமேவெண் சோதி பரவிய**' என்னும் அடியை மட் டும் முதலில் சேர்த்துவிட்டால் போதும். உடனே எல்லாவற்றையும் சேர்த்துச் சீர்பிரித்து நாற்சீர். முச்சீர், நடுவே தனிச்சீர் வரக்கூடிய நேரிசை வெண்பாவாக அமைத்துவிடலாம்!" என்ருர்.

உடனே தேவரவர்களுக்கு வெண்பா அமைப்பு விளங்கி விட்டது. இருந்தாலும் அவர்

நாவலரவர்களை நோக்கி, "நீங்களே கூறுங்கள். கேட்போம்" என்ருர், உடனே நாவலர்,

**"வரமுதவிக் காக்கு மனமேவெண் சோதி**
**பரவியமுத் தைத்தரு பத்தித்---திருநகையத்**
**திக்கிறை சத்திச் சரவணமுத் திக்கொருவித்**
**துக்குருப ரன்என வோது,"**

என்று சீர்பிரித்துப் பாடினர்.

இதைக் கேட்ட ஐயர் நாவலரின் திறமையை எண்ணி வியந்தார்.

பின்னர் நாவலரவர்கள் தேவருடன் சிறிது நேரம் உரையாடிவிட்டு விடை பெற்றுக்கொண்டு ஐயரவர்களுடன் தமதிருப்பிடத்திற்குச் சென்ருர்கள்.

மறுநாள் காலை வரையில் நாவலரவர்களுடன் ஐயர் உரையாடிப் பொழுதை நற்பொழுதாகக் கழித்தார். தேவரவர்களிடமிருந்து, மறுநாட் காலையில், ஆளொருவன் வந்து நாவலரையும், ஐயரையும் தேவரிடம் அழைத்துச் சென்ருன்.

வந்த இருவரையும் தேவர் வரவேற்று, இன்முகங் காட்டி, இன்சொல் கூறித் தம்மெதிரே உட்காரவைத்து 'ரொக்கமாக ஐஞ்நூறு ரூபா நிரம்பிய பை ஒன்றை நாவலரவர்களிடம் கொடுத்து ஐயரிடம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். நாவலர் அவர்கள் அளவிலா மகிழ்ச்சியுடன் பணம் நிரம்பிய பையை, ஐயரவர்களிடம் கொடுத்து, "தேவரவர்கள் கொடுக்கும் பொருள் ஒன்று நூருகப்

பெருகுவது வழக்கம், அன்றியும் அவர்கள் கொடுக்கும் பொருளை எந்த வேலைக்கு உபயோகப்படுத்தினாலும் அந்த வேலை மிகவும் சிறப்பாக நடைபெறுமென்பது அனுபவத்தினால் அறிந்ததாகும். தங்கள் தலைமகளுக்கு எல்லா நலன்களும் பெருகட்டும்,'' என்று சொன்னார்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட ஐயர், "தங்கள் குண நலத்தையும், புலவர் போற்றும் திருவுடன் விளங்கும் இவ்வள்ளலவர்களின் வள்ளற்றன்மையையும் எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது,'' என்று நாவலரவர்களைப் பார்த்துச்சொன்னார்.

பின்னர் ஐயர் தேவரவர்களிடத்திலும், நாவலரவர்களிடத்திலும் பிரியா விடை பெற்று, தேவரவர்கள் அனுப்பிய துணையுடன், தம் ஊர் போய்ச் சேர்ந்தார்.

நாவலரின் விருப்பத்தைத் தாம் நிறைவேற்றியதற்காகத் தேவர் மகிழ்ந்தார். நாவலரோ திருமணத்திற்குத் தாம் சொல்லியபடி தேவர் உதவி செய்தமைக்காக உளமிக மகிழ்ந்து, "பொன்னுச்சாமி என்னும் அரசரே! உங்கள் மகவைப்போன்றவர்களும், கல்வி வளம் மிக்கவர்களுமான புலவர்களை, அவர்களிடம் ஏற்பட்ட அன்பினால், சீராட்டிப் பெருமையுறச் செய்து, அவர்கள் உண்டு உரம் பெறுவதற்குத் தனத்தைக் கொடுத்துத் தாங்கள் வளர்ப்பதனால் தாங்கள் அப்புலவர்களுக்கு அன்பு மிக்க அன்னையைப் போன்றவர்களாகின்றீர்கள்'' என்ற கருத்தமைந்த,

**“சேயே யனையர் செழும்புலவோ ரீன்றெடுத்த**
**தாயே யனையைநீ பொன்னுமன்று!—தூய**
**கனங்கொடுத் தன்னோர்மேற் கனியுமன்பா லுண்ணத்**
**தனங்கொடுத்து நீவளர்ப்ப தால்!”**

என்னும் வெண்பாவைப் பாடித் தேவரவர்களுக்கு அனுப்பிவைத்தார். தேவர் அவ்வெண்பாவிலுள்ள சிலேடை நயத்தை நினைந்து நினைந்து மனமகிழ்ச்சி யுற்றார்!

மாம்பழக் கவிச் சிங்க நாவலரவர்கள் இவ்வாறு பிறர் நலங்கருதிச் செய்த செயல்கள் இன்னும் பல இருக்கின்றன!

★

# 4. மேழிச் செல்வம்

**வா**னத்தில் ஆயிரமாயிரம் அடிகட்கு அப்பாலும் வான ஊர்தியிலேறிச் செல்ல வல்லவரா யினும், கருங்கடலுக்கு அப்பாலும் கலம் செலுத் தும் திறம் படைத்தவராயினும், பின்னும் அருஞ் செயல்கள் பலவற்றை ஆற்ற வல்லவராயினும், அவரும், உணவும் உறக்கமும் இன்றி வாழமாட்டார் என்பதை எவர்தாம் அறியமாட்டார்!

> **"யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்**
> **உறங்குவது மாக முடியும்"**

என்ற தாயுமானுர் திருவாக்கும் இங்கே கவனிக்கத் தக்கதாம்.

உறக்கம், இயற்கையில் மக்களுக்கும், மாக்க ளுக்கும், பிற உயிர்களுக்கும் ஏற்பட்ட தொன்ரும். ஆனல், உணவை, அஃறிணைப் பொருள்கள் பலவற்றைப் போலவே உயர்திணைக் குழுவைச் சேர்ந்த மக்களும் தங்கள் முயற்சியினுல் பெற வேண்டியவர்களாய் இருக்கின்ருர்கள்.

சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் உலகமெங் கணும் மக்கள் தொகை சில கோடிகளாகவே இருந் தன. ஆகவே, தாமாகவே விளைந்த காய், கனி, கிழங்குகளே அக்காலத்தில் வாழ்ந்திருந்த மக்க ளுடைய உணவுக்குப் போதுமானவைகளாய் இருந் தன. மக்கள் தொகை பெருகப் பெருகத்

தாமாகவே விளையும் காய், கனி, கிழங்கு அவர்களுக்குப் போதுமானதாயில்லை. ஆகவே, மேற்கொண்டு தேவைப்படும் உணவுக்கு மக்கள் என்ன செய்வதென்று சிந்தித்தார்கள். அவர்கள் கொடிய மிருகங்களாகிய சிங்கம், புலி, ஓநாய் முதலியவைகள் மான், மரை, முயல், யானை முதலியவைகளை அடித்துத் தின்பதைப் பார்த்தார்கள். பிறகு தாங்களும் தங்களால் கொல்ல முடிந்தவைகளான, மான், முயல் முதலியவைகளைக் கொன்று தின்று வாழ்ந்து வந்தார்கள். சில சமயங்களில் தேவையானபோது அவைகள் அகப்படுவதில்லை. அப்போதெல்லாம் அவர்கள் பசியால் வாடி வருந்தினார்கள். அவர்களில் அறிவுள்ள சிலர் "என்ன செய்யலாம்" என்று சிந்தித்தனர்; தாங்கள், தின்று எறிந்த சில பழங்களின் கொட்டைகளும், சிந்திய தானியங்களும் தாமே முளைத்துச் சில இடங்களில் பலன்தருவதைக் கண்டார்கள்; அதற்குமுன் தாமாகவே விளைந்த பொருள்களைத் தின்றவர்கள் இயற்கைக் கற்பித்த பாடங்களைக் கற்றுக்கொண்டு அவ்வழியில் தானியங்களையும், பழந் தரும் மரங்களையும் விருத்தி செய்யத் தொடங்கினார்கள். அந்நாள் முதல் உலகத்தில் விவசாயத் தொழில் பரவத் தொடங்கியது. மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் தடுக்க முடியாத தேவைகளாகும். உடை உற்பத்திக்கு அடிப்படையாயுள்ள பஞ்சம் விவசாயத் தொழிலைத் தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆகவே, மக்களுடைய வாழ்க்கைக்கு மிகவும் தேவையாயிருப்பது விவசாயத் தொழிலே யாகும்.

விவசாயத் தொழில் நாட்டில் பெருகாவிடில் வேறு எந்தத் தொழிலும் பெருகுவதற்கு வழி ஏற்படாது. உணவின்றி எவர்தாம் எதைத்தான் செய்யவியலும்! மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை முதலியன பலவும் பசிக்கு முன்னால் நிற்கமுடியாமல் பறந்து விடுகின்றன. ஆகவே, நம் நாட்டிலே பிறந்த அனுபவமிக்க அறிஞர் பலரும் விவசாயத் தொழிலின் மேன்மையைப்பற்றிப் பலபடப் புகழ்ந்து கூறியிருக்கின்றனர். எந்தநாடு உணவுப் பொருளில் முட்டின்றி யிருக்கின்றதோ அந்த நாடுதான் வண்மையும் திண்மையும் உடையனவாய் இருக்குமென்பதில் ஐயமில்லை. வெள்ளியும், பொன்னும் ஒரு நாட்டில் மிகுந்திருப்பதைப் பார்க்கிலும் உணவுப் பொருள் மிகுந்திருப்பதுதான் அந்த நாட்டுக்குத் திண்மையும், பெருமையுமாகும். பிற தொழில்களைச் செய்கிறவர்கள் அந்தத் தொழிலினால் ஆக்கப்படும் பொருளை உணவாகக் கொள்ள முடியாது. ஆனால், விவசாயத் தொழிலைச் செய்கிறவர்களுக்கு அவர்களுடைய தொழிலினால் வரும் பொருளாகிய தானியமே உணவாகின்றது! அதனால் தான் பிற தொழில் செய்கிறவர்கள் அனைவரும் உணவுப் பொருளுக்காக விவசாயிகளின் தயையை எதிர் நோக்கி நிற்கிறார்கள்.

“வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயலுள்
பைங்கோல முடிதிருந்த பார்வேந்தர் முடிதிருந்தும்”

என்றும்,

“மேடுவெட்டி வளப்படுத்தி மிகவரம்பு நிலைநிறுத்திக்
காடுவெட்டி உலகநெறிக் காராளர் காத்திலரேல்
மேடுவெட்டிக் குறும்பறுக்கும் வேல்வேந்தர் எற்றாலும்
காடுவெட்டி உழுதுவரும் கலிகளைய மாட்டாரே!”

“எழுதொணா மறைவிளங்கும் இயலிசைநா டகம்விளங்கும்
பழுதிலா அறம்விளங்கும் பார்வேந்தர் முடிவிளங்கும்
உழுதுசால் பலபோக்கி உழவருழக் கியவெங்கால்
புழுதியால் விளையாத பொருளுளவோ புகலீரே?”

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லோரும்
தொழுதுண்டு பின்செல்வார் என்றேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றோ இவருடனே இயலும்இது
பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்தில் பிறந்தோர்க்கே”

என்றும்,

“உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு”

“பூமி திருத்தி உண்”
“தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
“நெற் பயிர் விளை”
“மேழிச் செல்வம் கோழை படாது”

என்றும்,

**"உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை"**

என்றும்,

அவ்வையார், வள்ளுவர், கம்பர் போன்றவர்கள் கூறி இருப்பதனாலும் பயிர்த் தொழில் மக்கள் வாழ்க்கைக்குப் பெரிதும் தேவையானது என்பதை எல்லோரும் தெரிந்து கொள்ளலாமே !

உணவுப் பொருள் எந்த நாட்டிலே ஏழைகளுக்கும் எளிதாகக் கிடைக்கின்றதோ அந்த நாட்டிலே பசிக்கொடுமை இல்லா தொழிகின்றது. ஒழிந்தால் பொய், பொருமை முதலியன மக்களிடம் குறையுமென்பதில் ஐயமில்லை.

நம் நாட்டிலே முற்காலத்திலும், இடைக் காலத்திலும், ஏன்! பிற்காலத்திலுங்கூட, தாங்கள் எத்தொழிலைச் செய்துகொண்டிருந்த போதிலும் பயிர்த் தொழிலை மேன்மையாகக் கருதி வாழ்ந்த பெருமக்கள் பலர் இருந்தனர்! அரசரும், பிரபுக்களும் உழவுக்காலம் வந்தவுடன் தங்களுக்கென்று சொந்தமாக வைத்துக்கொண்டிருந்த நிலங்களில் சிறிது நேரமேனும் தாங்களே ஏர் பிடித்து நிலத்தை உழுவார்கள். இதனால், உழவுத்தொழில் மக்களால் மதிப்பிற்குரியதாகக் கருதப்பட்டது. அதனாலும் பயிர்த் தொழிலை மக்கள் பலர் பின் பற்றினார்கள். பேரும் பெருமையும் உள்ளவர்கள் ஒரு தொழிலைப் பின்பற்றினால் அத்தொழில் மக்களால் மதிக்கப்படுதல் இயல்பன்றோ?

கம்பரின் பாதுகாவலராயிருந்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாரும், புலவர்

களின் பாதுகாவலரென்று புகழப்படும் ஏகம்ப வாணரும் அரசறிய வாழும் வாழ்க்கையுள்ளவர் களாயிருந்தும் உழவுத் தொழிலேயே தங்கள் உயிர்த் தொழிலாகக் கொண்டிருந்தார்கள் என்பது யாவ ரும் அறிந்த செய்தி யன்றோ! பயிர்த் தொழிலைத் தங்கள் உயிர்த் தொழிலாகக் கொண்டிருந்தவர்கள் செய்து கொடுக்கும் முடியைத்தான், முதன் முதல் அரியணை ஏறும் போது, தமிழ்நாட்டில் அரசர்கள் தங்கள் தலையில் தரித்துக்கொண்டார்கள் என்பது, பல நூல்களின் வாயிலாக அறியக் கிடக்கின்ற செய்தியாகும்.

பயிர்த் தொழிலைப் பற்றிக் கவலைப்பட வேண் டாத அளவுக்கு அரசறிய வாழ்ந்த நிலையில் இருந் தவர்களிற் பலரும், நமது நாட்டில், பயிர்த் தொழிலை மதித்து வாழ்ந்து வந்தனர் என்பதற்கு உதாரண மாகப் பல நிகழ்ச்சிகளை இங்கே கூறக் கூடுமாயி னும், அவற்றில் ஒன்றை மட்டும் இங்கே கூறு வோம் :

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர், புலவர் பலர் தோன்றி வாழ்ந்த பொன் விளைந்த களத்தூரிலே, **தமிழ்வாணர்** என்னும் காரணப் பெயரினையுடைய புலவர் ஒருவர் இருந்தார். அவர் இலக்கண இலக்கியங்களில் தேர்ந்தவர் ; விரைந்து கவிபாடுவதில் வல்லவர். இருப்பினும் அவர் மேலும் மேலும் கற்பதிலும், கற்றவைகளைப் பிறருக்கு எடுத்துச் சொல்வதிலுமாகத் தம் காலத்தைக் கழித்து வந்தார். தம் வரையில் வாழ்வதற்கு வேண்டுமளவு அவருக்குப் பொருளிருந்தது : விளை

நிலங்களுமிருந்தன. ஆகவே, அவர் தமிழை ஆராய்வதிலேயே தம் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார். விருந்தினரை உபசரிப்பதிலும் அவருக்கு வெகு பிரியம். அவர் மனைவியாரும் 'ஊசிபோகிற வழியிலே நூலும் போகும்' என்ப தற்கேற்ப தம் கணவர் எண்ணத்திற்குத் துணையாக வாழ்ந்து வரலானர்.

'மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து'

என்னும் பொய்யிற் புலவருடைய பொருளுரையைத் தேர்ந்த புலவரும், அவர் தம் மனைவியாரும் விருந்தினரை இன்முகங் காட்டி இன்சொற் கூறி வரவேற்றுபசரிப்பதிலே நிகரற்று விளங்கினர்.

தமிழ்வாணர் என்னும் இப்புலவர் பெருந்தகை வருவாய்க்கு மேலும் செலவு செய்தால் ஆக்கங் குன்றும் என்பதை அறியாதவரன்று! இருப்பினும், பிறர் பசியைப் போக்கி மகிழ்வதிலே பெருவிருப்புக் கொண்ட இப்பெருந்தகையாளர் தம் செல்வம் தேய்பிறைபோலக் குன்றுவதறிந்தும் விருந்தினர் போற்றும் தம் கொள்கையில் மாறுபடாதொழுகி வந்தார். அதனல், நாளடைவில், அவருக்குரிய நிலபுலங்களும் கைப்பொருளும் கரைந்து விட்டன. விருந்தினர் போற்றும் தம் கொள்கையைக் கடைப்பிடிக்க முடியாது அவர் கலங்கினர்;

'சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம் ஈதல் இயையாக் கடை'

என்னும் மெய்யுரையை உன்னித் தாம் மேலும் தம் இல்லத்திற்கு வரும் எளியரின் 'பசிப்பிணி என்னும் பாவி'யைப் போக்க முடியாத போது இவ்வுலகில் இருந்து யாது பயனெனக் கருதினர்.

இந்த நிலையிலே 'பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும்' என்பதற்கேற்ப அறிவு வளரப் பெற்ற அவர் மனைவியார் அவரை நோக்கி, "தாங்கள் மனங் கவல்வது எதற்கு? நம் செல்வம் வீண் வழியில் செலவழிந்து விடவில்லையே. பனி யால் நனைந்து வெயிலா லுலர்ந்து பசியா லலைந்து வந்தவர்களைப் போற்றும் வழியில் தானே செலவா யிற்று. அதற்காக நாம் மனமகிழ வேண்டுவ தன்றோ முறை. இதைத் தாங்கள் அறியாதவர் களன்றே," என மொழிந்தார்.

தம் மனைவியாரின் தேற்றவுரைகளைச் செவியி லேற்ற தமிழ்வாணர் தம் மனைவியாரை நோக்கி, "என்னுளம் அறியாது இன்றே முதன் முறையாக நீ இவ்வாறு புகன்றாய். பொருள் இன்மையைக் கருதி யான் சிறிதும் வருந்தவில்லை. இனி, வரு வோரின் பசியைப் போக்கி வாழ்வதற்கு வழி இல்லையே என்றுதான் யான் கவல்கின்றேன். '**ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை மாற் றுவா ராற்றலிற் பின்**' என்னும் குறளின் பொருள் நீ யுணர்ந்தது தானே!" என்றுரைத்தார்.

உடனே அவர் மனைவியார், "இதற்காக நீங்கள் ஏன் வருந்துதல் வேண்டும்? பிறருக்குக் கொடுப்பதும், பிறரிடமிருந்து பெறுவதும் புலவர்

தொழிலன்றோ! சங்க காலத்துப் புலவர் பலரிடம் இவ்வியல்பு வாய்ந்திருந்ததாகத் தாங்கள் எனக்கு உரைத்திருக்கின்றீர்களே! புலமை மிக்க தாங்கள் இதுவரையில் நம் இருப்பிடம் தேடிவந்தவர்களுக்கு இனிய உணவளித்து மகிழ்ந்திருக்கின்றீர்கள். இனியும் தாங்கள் அவ்வாறே செய்தல் வேண்டும்; அதற்குப் பொருள் வேண்டும். பொருள் பெறுவதற்குத் தாங்கள் செய்ய வேண்டுவ தொன்றுளது. வள்ளல் தன்மை வாய்ந்த செல்வ மிக்க ஒருவரிடம் தாங்கள் செல்லுதல் வேண்டும். சென்றால், தங்கள் அருமை அறிந்து அவர் தங்கட்குப் பெரும் பொருள் ஈதல் கூடும். பிறகு, நம் விருந்தோம்பும் வாழ்க்கை குறைவின்றி நடைபெறும்'' என மொழிந்தார்.

தம் மனைவியார் மொழிந்த வாசகங் கேட்ட தமிழ்வாணர், 'இதுகாறும் யான் ஈதலை யன்றி இரத்தலை அறியேன். இரப்பதற்குரிய நோக்கம் எவ்வளவு உயர்ந்த தாயினும் இரப்பதென்பது இழிவன்றோ! 'ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற் கிரவின் இளிவந்த தில்!' என்ற வள்ளுவனாரின் வாய்மொழியை நாம் கவனிக்க வேண்டாவோ?' என்றுரைத்தார்.

உடனே அவர் தம் மனைவியார் அவரை நோக்கி, "எவ்வகையிலும் உழைக்க மனமற்ற உடலுறுதியுள்ள சோம்பேறிகள், இரப்பதற்குரிய நோக்கம் எவ்வளவு உயர்வுடையதாயினும், இரப்பது இழிவென்பது வள்ளுவனாரின் கருத்தாயிருக்கு

மென்பது என் தாழ்மையான கருத்தாகும். இரப் பென்பது தகுதியை யுடையதாயின் இரக்கலா மென்பது என் கருத்து. புலவர்கள், புரவலர்களை நாடி இரப்பதில் இழிவொன்றும் இல்லை. மொழி யைத் துணைகொண்டு வாழும் புரவலர்கள் அம் மொழியை வளர்க்கும் புலவர்களைப் போற்ற வேண்டுவது கடமையாகும். ஆகவே, வள்ளற் றன்மை வாய்ந்த புரவலர்களிடம் புலவர்கள் சென்று பொருள் பெறுதல் செய்த உதவிக்குப் பெறும் கைம்மாறுகுமே யன்றி இரத்தலாகாது. 'இரப்பன் இரப்பாரை யெல்லாம், இரப்பின், கரப் பார் இரவின்மி னென்று' என்னும் வள்ளுவனாின் வாய் மொழியும் இரப்பதற்குரியார் வள்ளன்மை வாய்ந்தாரிடம் இரக்கலாமென்பதைக் குறிப்பிக் கின்ற தெனக் கூறுவதில் பிழை யொன்று மில்லையே! கல்வித்துறை போய தங்களுக்கு யான் யாது கூறவல்லேன்! வள்ளற்றன்மை யுடையார் எவரிடமேனும் சென்று தாங்கள் பொருள் பெற்று வந்தாலன்றி இனி யாம் விருத்தினரை உபசரிக்கும் உயர் நிலையில் இருக்கவல்லோ மல்லோம்!'' என்று ரைத்தார்.

அறிவுசான்ற தம் இல்லமர் கிழத்தியாரின் பொருந்துரைகளைக் கேட்ட புலவர் தமிழ் வாண ருக்குத் தம் மனைவியாரின் வாய்மொழி வாய்மை யுடையதுதான் என்று தோன்ருமலில்லை. இருப்பி னும் இதுகாறும் எவரிடமும் சென்று எதையும் கேட்டறியாத தமிழ்வாணர் இப்போது எவரிடம் சென்று எதைக் கேட்பது என்று தமக்குள்

சிந்திக்கலானார். தம்மனைவியாரின் உரை கருத்து நிரம்பியவை என்பதையும் அவர் அறிவார்.

தமிழ்வாணர் வாழ்ந்திருந்த காலத்தில் தொண்டைவள நன்னாட்டில் முதுகுன்றம் என்னும் பதியில் சடையர் என்னும் வேளாளர் தலைவர் ஒருவர் இருந்தார். அயின்றைச் சடையர், திருவெண்ணெய் நல்லூர்ச் சடையர் ஆகிய இவர்களின் பெயர்களுடன் இவர் பெயர் கலந்து மயங்காதிருக்க வேண்டுமென் றெண்ணியோ என்னவோ புலவர்கள் இவரைக் "குன்றைச் சடையர்" என்றே கூறிவந்தார்கள். குன்றைச் சடையர் நன்செய் வயல்கள் நிரம்பிய இருபது ஊர்களின் உரிமையாளராய் இருந்தார். தாளாண்மை மிக்க வேளாண் வாழ்க்கையை மேற்கொண்டிருந்த குன்றைச் சடையர் புலவர்களைப் புரக்கும் புரவலராய் வாழ்ந்து வந்தார். அவர் உதவியை நாடிச்செல்லும் புலவர்களே யன்றிக் கல்வி நலமற்ற வறிஞர்களும் ஏமாற்ற மடைவதில்லை. கற்றவரேயன்றிக் கல்லாதவரும் தக்க காலத்தில் அவர் உதவியைத் தடையின்றிப் பெறுவர். உழுதொழில் தெரிந்த பல இரவலர்களுக்குச் சடையர் தம் நிலங்களைப் பகிர்ந்து கொடுத்தும் 'பிற்காலப் பாரி'யாக விளங்கினார். உதவிவேண்டுவோர் பலரும் பழுமரம் நாடும் பறவையெனக் குன்றைச் சடையரை நோக்கி நாள் தோறும் வந்தவண்ணமிருந்தனர். கபிலர், பரணர் போன்ற பொய்யடிமையில்லாப் புலவர் பெருமக்கள் குன்றைச் சடையர் காலத்தில் இருந்திருப்பின் அவர்கள், தங்கள்

நெஞ்சாரக் குன்றைச் சடையரைப் புகழ்ந்து பாடி இருப்பார்களென்பது திண்ணம்.

குன்றைச் சடையரின் புகழ் தொண்டை நாட்டில் மட்டுமல்ல; சோழநாட்டிலும் அதை அடுத்திருந்த பாண்டிநாட்டிலுங்கூட ஒருவாறு பரவிற்று. புலவர் புரக்கும் பெருந்தகையாளரின் புகழ் நானிலமெங்கும் பரவுவது இயல்பன்றோ?

இத்தகைய குன்றைச் சடையரின் அருமை பெருமையினைத் தமிழ் வாணர் அறிந்திருந்தார். இவர் மனைவியார் 'தக்காரொருவரிடம் சென்று பொருள்பெற்று வருதல் நலம்' என்று சொல்லியவுடன் இவருக்குக் குன்றைச் சடையரின் நினைவே மிகுதியும் மனத்தில் தோன்றியது. அந்த எண்ணத்தைத் தமிழ்வாணர் தம் மனைவியாரிடம் தெரிவித்தார்.

அவர் மனைவியார், "தாங்கள் அறியாதது இல்லை. தக்காரிடம் சென்று கேட்பதே தகுதியாகும். முதுகுன்றப் பதியாரைப் பற்றித் தாங்களே 'அவர் கற்றுரைப் போற்றும் கருத்துள்ளவர்' என்று என்னிடம் உரைத்திருக்கிறீர்கள். அவருழைச் சென்றால் நம் விருப்பம் நிறைவுறும் என்பது என் எண்ணமாகும்," என்றுரைத்தார். தமிழ்வாணரின் விருப்பமும் அதுவேயாகும்.

மறுநாள், புலவர் தமிழ்வாணர், தக்கதுணையுடனும், வேண்டிய வசதியுடனும் முதுகுன்றம் என்னும் ஊரை நோக்கிச் செல்லலானார். வழியில் இரவு காலத்தைத் தகுந்த இடத்தில் தங்கிக் கழித்து இறுதியில் முதுகுன்றத்தை யடைந்தார்; அடைந்து

குன்றைச் சடையர் வாழும் மனைக்குச் சென்றார். சடையர் இல்லம் அவர் புகழுக் கேற்றவாறு பெரிதாயிராமல் சிறிய அளவினதாய் இருந்தது. ஆயினும், அவர் இல்லத்தை அடுத்து விருந்தினர் தூங்குவதற்கென்றும் உணவுப் பொருள்களை வைப் பதற்கென்றும் பல இல்லங்கள் அமைக்கப்பட்டி ருந்தன. பொதுவாகக் குன்றைச் சடையரில்லமும், அவர் இல்லத்தைச் சார்ந்திருந்த இல்லங்களும் ஆடம்பரமின்றி அமைதியுடனிருந்தன. பண்டைக் காலத்திலே, தமிழகத்திலே வாழ்ந்த பல பெருமக் களின் இல்லங்கள் இவ்வாறே இருந்தன வென் பதை நாம் அறிகிறோம்.

தமிழ்வாணர், குன்றைச் சடையரின் இல்லத் தை அடைந்தவுடன், அங்கிருந்த பணியாளர், தமிழ் வாணர் 'புலவர்' என்று அறிந்து கொண்டு தமிழ்வாணரையும், அவருடன் சென்ற இருவரை யும் புலவர்கள் தங்கும் இல்லத்திற்கு அழைத்துக் கொண்டு போய்க் குளிக்கச் செய்து புத்துடை கொடுத்து, உடுத்துக் கொண்ட பின்னர், தக்காரைக் கொண்டு உணவளிக்கச் செய்து உபசரித்தனர். தம் இல்லந்தேடி வந்தவர்களுக்குத் தாம் செய்த உபசாரத்தைப் பார்க்கிலும் அதிகமாகத் தமக்குச் செய்யப்படும் உபசாரத்தைக் கண்ட தமிழ்வாணர் மனமிக மகிழ்ந்தார். பிறகு, தமிழ்வாணர், தாம் குன்றைச் சடையரைப் பார்ப்பதற்காக வந்த செய் தியைப் பணியாளரிடம் தெரிவித்தார்.

அவர் எண்ணத்தை அறிந்த பணியாளர் தலை வன் அவரை நோக்கி, "பக்கத்து ஊராகிய பனைப்

பாக்கத்தில், ஐம்பது காணி நிலத்தில் விளைந்த நெல் ஒப்படி செய்யப்படுகிறது; நேரில் நின்று வேலையை விரைவுபடுத்துவதற்காக எங்கள் தலைவர் வழக்கம்போல அங்குச் சென்றிருக்கிருர். பொழுது மறைந்தவுடன்ருன் அவர் இங்கு வருவார். அவசரமாயின் தாங்கள் அங்குச் சென்று அவரைக் காணலாம். யான் துணைவருகிறேன்'' என்றுரைத்தான்.

''இல்லை; யான் இங்கு இருந்து சற்றுப் படுத்துறங்கி வழி நடந்ததாலுண்டான களைப்பைப் போக்கிக் கொள்ளுகிறேன்; உங்கள் தலைவரை மாலையில் பார்க்கிறேன். முடியுமானுல், பொன்விளைந்த களத்தூரில் இருந்து புலவர் தமிழ்வாணர் வந்திருக்கின்ருர் என்று உங்கள் தலைவரிடம் கூறு'' என்று புலவர் கூறினுர்.

''தங்கள் கருத்துப்படி நடந்து கொள்ளுகிறேன்'' என்று பணியாளர் தலைவன் கூறிச் சென்ருன்.

பொழுது மறைந்த சிறிது நேரத்திற்குப் பின்னர், குன்றைச் சடையர் தம்மில்லம் வந்து சேர்ந்து தமிழ்வாணருடன் வெகுநாள் பழகியவர் போல அளவளாவினுர். சடையரின் உயர்குணத்தை உய்த்துணர்ந்த தமிழ்வாணர்,

**''தொல்பெருங் கால மெல்லாம் பழகினும் தூயரல்லார் புல்லலர், உள்ளந் தூயார் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே''** என்ற கம்பரின் வாக்கை நினைந்து நினைந்து மனம் நெகிழ்ந்தார்.

"தாங்கள் வந்த செய்தியை என் பணியாள் முன்னரே என்னிடம் வந்து தெரிவித்தான். தங்களை உடனே வந்து காணவேண்டுமென்னும் ஆவல் என்னை உந்தியபோதிலும் என் கடமையைச் செய்யாமல் யான் இங்குவர என் மனம் இடம் தரவில்லை. ஆகவே, என்னுடைய கடமை தீர்ந்தவுடன் வந்து தங்களைக் கண்டேன்,'' என்று குன்றைச் சடையர் தமிழ் வாணரிடம் உரைத்தார்.

"தாங்கள் கூறிய கடமை என்னவோ ?'' என்று கேட்டார் தமிழ் வாணர்.

"களத்தில், நெல்லொப்படி நடந்தது. மூன்று நாட்களாக நடந்து, இன்று, சற்று முன்னர்தான், முடிவுற்றது. அதை நேரில் யான் கண்காணிப்பதையே என் கடமை என்று கூறினேன்'' என்றார் சடையர்.

"நெல் ஒப்படியாகும் போது தாங்களே இருக்கவேண்டுமோ? தங்கள் பணியாட்களில் நம்பிக்கையுள்ள எவரேனும் ஒருவர் இருந்தால் போதாதோ?'' என்றார் புலவர்.

உடனே சடையர் புலவரை நோக்கி, "என்னுடைய பணியாட்கள் எல்லோரும் நம்பிக்கையுள்ளவர்கள்தாம். என் பணியாட்களிடம் அவநம்பிக்கையுற்று யான் நெல் ஒப்படிக்குச் செல்லவில்லை. நெல் ஒப்படி முடிந்தவுடன் விவசாயி தன்னை நம்பி வாழ்கிறவர்களுக்கு வேண்டிய அளவு நெல்லைக் கொடுத்துவிட்டு மிகுதியையே தான் தன் இல்லிற்கு எடுத்தேகவேண்டுமென்பதைத் தாங்கள்

அறியாதவர்களன்றே! அப்படிக் கொடுக்கப்பட வேண்டியவர்களுக்கு, யானே நேரில் இருந்து திருப்தியுண்டாகுமாறு நெல்லைக் கொடுப்பதையே தொன்றுதொட்டு யான் என் கடமையாகக் கொண்டிருக்கிறேன். உழைப்பவர்கள் திருப்தியடைந்தால் தான் விளைநிலம் பலன்தரும் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. அன்றியும் பயிர்த்தொழில் சம்பந்தமான எந்த வேலையையும் யான் நேரில் இருந்து நடைபெறச் செய்வதையே என் கடமையாகக் கொண்டுள்ளேன். அதனுல், சிலருக்குத் தோன்றுவதுபோல எனக்குத் துன்பந் தோன்றுவதில்லை; மகிழ்ச்சியே தோன்றுகிறது. அன்றியும் உரியவன் மேற் பார்வையில் நடைபெறும் விவசாயம் நல்ல பலனைத் தரும் என்று நான் கருதுகிறேன். எவ்வளவு நிலப்பரப்பு இருந்த போதிலும் உரிமையாளரின் மேற்பார்வை இருந்தே தீரவேண்டும். உலகம் வாழ்வதற்கு அடிப்படையாக இருக்கும் தொழில் விவசாயமேயாகும். ஆகவே, தம் கடமையை உணர்ந்து விவசாயத் தொழிலைச் செய்கின்றவர் உலகத்தைக் காப்பவராகின்ருர். அப்படிப் பட்டவர் எப்போதும் செல்வத்திற் குறையமாட்டார். அன்றியும், எவ்வகை விவசாயத் தொழிலையும் பணியாட்களுடன் உடனிருந்து நடைபெறச் செய்வதில் எனக்குத் தனி மகிழ்ச்சியுண்டாகிறது. இவ்வாறெல்லாம் நடக்கும் விவசாயிகளே தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றிக்கொண்டு பிறருக்கும் உதவி செய்ய முடியும். இத்தகைய முறையின்றி விவசாயத்

தொழிலை நடத்துகிறவர்களால் நன்மைக்குப் பதிலாகத் தீமையே விளையும்'' என்றுரைத்தார்.

இவ்வாறு குன்றைச் சடையர் கூறிய வார்த்தைகள், புலவர் மனத்தில், பலவித எண்ணமாகிய அலையை உண்டாக்கி விட்டன! விவசாயத் தொழிலைத் தாம் நேரில் கவனியாமையினாலும், தானிய உற்பத்தியைப் பெருக்கி அதைக் கொண்டு பிறருக்கு உதவி செய்யாமையினாலும் தம் செல்வம் குன்றியமை காரணமாக இப்போது, தாம் பிறர் தயைக்கு எதிர்நோக்கி இருப்பதை எண்ணி அவர் மனங் கவன்றார்.

அப்போது குன்றைச் சடையர் புலவரை நோக்கி, ''தாங்கள் இவ்வளவு தூரம் என்னை நாடிவந்தமைக்குரிய காரணம் யாதோ?'' என்று கேட்டார்.

உடனே புலவர், ''யானும் கொஞ்சம் விளைநிலத்திற்குரியவனாய் இருந்தேன். ஆயினும், புலமையையே பெரிதெனக் கருதித் தாங்கள் கூறிய வகையில் விவசாயத் தொழிலை நடத்தாமையினால் இருந்த பொருளையும், பொன்னாபரணங்களையும், விளை நிலங்களையும் இழந்து வழக்கம்போல் வருவார்க்கு உணவளிப்பதற்கும் வகையின்றி என் மனைவியின் தூண்டுதலினால் தங்களை நாடிவந்தேன்'' என்றுரைத்தார்.

இவ்வாறு புலவர் கூறிய வார்த்தைகள் குன்றைச் சடையரின் மனத்தை உருக்கி விட்டன. பிறகு அவர் புலவரை நோக்கி, ''தாங்கள், புலமையைப் பெரிதெனக் கருதியது குற்றமன்று. ஒரு

நாட்டின் நாகரிக வளர்ச்சிக்குத் துணை செய்வது புலமையே யாகும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நல்ல துறையில் வேலை செய்தால்தான் நாடு வளம் பெறும். புலமை இல்லாத நாடு சிறப்புருது. உடல் வளர்ச்சிக்கு உணவு தேவைப்படுவது போலவே அறிவு வளர்ச்சிக்குப் புலமை தேவைப் படுகிறது. ஆகவே, தாங்கள் புலமையைப் பெரி தெனக் கருதியது தவறெனக் கொள்ளவேண்டாம்'' என்றுரைத்தார்.

சடையரின் இவ்வார்த்தை புலவரின் மனத்தில் சிறிது மகிழ்ச்சியை உண்டாக்கியது.

அன்றிரவு புலவரும், அவருடன் வந்தவர்களும், குன்றைச் சடையரும் உணவு கொள்வதற்காகச் சடையரின் இல்லில் அமர்ந்தார்கள், அவர்களுக்கு முன்னுல் தலைவாழை இலைகள் விரிக்கப்பட்டிருந் தன. பருகுவதற்காகப் பாத்திரங்களில் நீர் கொண்டுவந்து வைக்கப்பட்டது. சோறும், பிறவும் புலவரிலையைத் தவிர சடையர் முதலியவர் களின் முன்னிருந்த இலைகளில் பரிமாறப்பட்டன. புலவர் இலையில் அவைகளொன்றும் வைக்கப்பட வில்லை. புலவர் காரணம் தெரியாமையினுல் விழித்தார் !

இரண்டொரு விநாடிகள் சென்றன. முன்னரே வள்ளலாராகிய குன்றைச் சடையர் செய்திருந்த ஏற்பாட்டின்படி சமையற் காரனெரு வன் சோறும், பிறவும் கொண்டு வருவதற்குரிய தட்டில் பொற்காசுகளையும், பொன் ஆபரணங்களை யும் கொண்டுவந்து அவைகளைப் புலவருக்கு முன்

ஞல் விரிக்கப்பட்டிருந்த தலை வாழையிலையில் பரிமாறினன். புலவர் பெருமதிப்புள்ள பொன்னுபரணங்களும், பொற்காசுகளும் தம் இலையில் படைக்கப்பட்டதைக் கண்டு வியப்புற்ருர்! அவர், வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டு சடையரை நோக்கினர். தமக்கு முன்னல் இருந்த இலையில் பரிமாறப் பட்ட சோற்றையும் பிறவற்றையும் தொடாமல் இருந்த சடையர், தம்மைப் பார்த்த புலவரை நோக்கிப் புன்சிரிப்புக் கொண்டார். உடனே புலவர் சடையரைப் பார்த்து,

**"பாட்டாற் சிறந்த புலவரெலாம்**
**பாடும் சடையா! கொடையாளா!**
**கேட்டேன் உன்றன் புகழ்கேட்டேன்**
**கிளர்ந்த மனத்துடன் இங்குற்றேன்**
**போட்டாய் இலையிற் பொன்னுடனே**
**பொன்னு பரணமும் புதுமையிது!**
**வேட்டேன் பசியா லன்னத்தை**
**வைத்தாய் பொன்னை வழக்காமோ!"**

என்ருெரு பாடலை இயம்பினர்!

இந்தப் பாடலைக் கேட்டவுடன் தமிழ் நல முணர்ந்த தண்குண சீலராகிய குன்றைச் சடையர் புலவரை நோக்கி, "தாங்கள் தமிழ் நலமே பெருநல மாகக்கொண்டு பொன்னையும் பொன்னுபரணங் களையும் இழந்துவிட்டதாக வருந்திச் சொன் னீர்கள். ஆகவே, இந்தப் பொன்னையும் பொன்னு

பரணங்களையும் தங்கள் இலையிற் படைக்கச் செய்தேன். தாங்கள் உணர்ந்த தமிழ் நலத்தால் பொன்னுபரணமும், பொன்னும் தங்களை விட்டுப் போய் விடவில்லை, ஆகவே, தாங்கள் தமிழ் நலமுணர்ந் தமைக்கு வருந்துதல் வேண்டாம். தாங்கள் செல்லும்போது வேறு பெரும்பொருள் தருகிறேன்! அதைக்கொண்டு தாங்கள் தங்கள் ஊரில் இழந்த விளை நிலங்களை வாங்கி முன்போலவே வறிஞர் பசியைப் போக்கி வாழ்ந்திருங்கள். ஆயின், ஒன்று சொல்லுகிறேன் ; மருத்துவன் தாமோதரனார், மதுரைக் கூல வாணிகன் சாத்தனார் போன்ற சில பெரும் புலவர்கள் தண்டமிழ் மொழியில் எண்டிசையும் போற்றப் பெருமையுற்று வாழ்ந்திருந்தார்களெனினும், அவர்கள், தங்கள் குடும்ப வாழ்க்கைக் காகப் பிறிதொரு தொழிலை மேற்கொண்டிருந்தார்கள். அவர்களைப் போலவே, இன்றும் புலவர்கள், எவ்வளவுதான் தமிழார்வங்கொண்டிருந்த போதிலும், தங்கள் குடும்ப வாழ்க்கை நடைபெறுவதற்காகத் தமிழ்த் துறையையோ பிறிதொரு வழியையோ, தங்கள் பிழைப்புக் கேற்றதாகச் செய்துகொள்ளல் வேண்டும். அவ்வாறு செய்துகொண்டால், தமிழறிஞர்கள் தாங்கள் தமிழறிஞர்களாகத் திகழ்வதைக் கருதி வருந்தவேண்டிய நிலை ஏற்படாது. ஏனெனில், புலவரைப் போற்றிய சேர சோழ பாண்டியமன்னர்களும், வள்ளல்களும், பிறகொடையாளர்களும் இக்காலத்தில் இல்லை. அவிழ்ச் சுவை யல்லது தமிழ்ச் சுவை தேர்ந்தோர் காண்பதற் கரியராயினர்.

**"எண்ணான்கு முப்பத் திரண்டுபற் காட்டி யிசைவுடனே**
**பண்ணைகச் செந்தமிழ் பாடிவந் தாலுமிப் பாரிலுள்ளோர்**
**அண்ணாந்து கேட்ப ரழகழ கென்ப ரதன்பிறகு**
**சுண்ணாம்பு பட்ட இலையுங் கொடார்கவி சொன்ன**
**[வர்க்கே"**

என்று பாடிய கவிஞர் தற்கால உலகானுபவம் நன்கு தெரிந்தவராவார். ஆகவே, புலவர்கள், இக் காலத்தில், தங்கள் புலமையை அறிவுவ்ளர்ச்சிக் கென மதித்து, வாழ்க்கைக்குப் பிறிதொரு வழியைத் தேடிக் கொள்ளுதல் நலமாகும். புலவர்கள் விளை நிலங்களைப் பெற்றிருப்பார்களாயின் அவற்றில் பயிரிடவும் அவர்கள் பழகுதல்வேண்டும். பிறகு அவர்கள் விளை நிலத்தின் வருமானத்தைக் கொண்டே வாழவும், அறம் பல செய்யவும் வேண்டுமே யன்றி விளைநிலம் முழுவதுமே ஒழிந்துபோகும் வகையில் செயலாற்றுதல் கூடாது. தனக்குரிய விளை நிலம் முழுவதும் ஒழிந்துபோகும் வகையில் வாழ்க்கையை நடத்தும் வேளாளன் தன் கடமையைச் செய்யத் தவறியவனாவான். உழுவார் உலகத்திற்கு அச்சாணி போன்றவர்களல்வா? அச்சாணி உடைந்தால் உலகம் என்னாகும்!" என்றுரைத்தார்.

இவ்வாறு குன்றைச் சடையர் கூறிய வார்த்தைகளைச் செவிமடுத்த புலவர் உலகானுபவ மின்றித் தாம் வாழ்ந்த வாழ்க்கையை நினைந்து வருந்தினார்.

பின்னர், புலவருக்கு வேறு இலையில் உணவு பரிமாறப்பட்டது. எல்லோரும் உண்டு மகிழ்ந்தனர். மறுநாள் விடியற்காலையில் சடையர், புலவரையும் அவருடன் வந்தவர்களையும் தக்க பாதுகாப்

புடன் நல்லதொரு வண்டியிலேற்றிப் பொன் பொன்னுபரணம், பெரும் பொருள் முதலியவை களைப் புலவரிடம் கொடுத்துப் பின்சென்று அகமு முகமு மலர்ந்து வழிகூட்டி அனுப்பினுர்.

புலவர், தம் ஊரை அடைந்து சடையர் தந்த பொருளைக் கொண்டு அதற்கு ஏற்ற அளவில் விளை நிலங்களை வாங்கி விவசாயத் தொழிலைப் பிறர் வியப் புறுமாறு நடத்திப் பின்னர் எக்காலத்திலும் பிறர் தயையை நாடாமல், தாமே பிறர்க்குதவும் நிலையில் இருந்து வாழலானுர் !

**"உழவுக்குந் தொழிலுக்கும்**
**வந்தனை செய்வோம்"**

என்னும் பாரதியாரின் வாக்கு இங்கே கவனிக்கத் தக்கதாம்.

★

# 5. நன்றி மறவா நல்லாப் பிள்ளை

தமிழ் நாட்டினர் எந்தக் காலத்திலும் ஒருவர் செய்த நன்றியை எளிதில் மறந்துவிடுவதில்லை.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"**

என்னும் வள்ளுவனாரின் வார்த்தையை என்றும் மறவாதவர் தமிழ் நாட்டினர்.

தமிழ் மக்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த கல்வியினாலும், உயர்ந்த எண்ணத்தினாலும் புகழ்பெற்று விளங்கினார்கள். தமிழ்நாட்டினரின் பண்பாடு தனிப்பட்டது; உயர் வுள்ளது. தமிழர்களின் சிறந்த பண்பாட்டின் பயன்தான் உலக அறிவரங்கில் உயர்ந்து விளங் கும் திருக்குறள்! "வள்ளுவன் தன்னை உலகி னுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று கவிஞர் பாரதியார் கூறிய அருமையையும் கவனியுங்கள். வள்ளுவர் செய்த நூலை உலகுக் களித்த தமிழ் மக்களின் பண்பாடு அன்றுதொட்டு இன்றுவரையில் கற்றோரால் போற்றப்படுகின் றது. இவ்வளவுக்கும் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த—வாழ்கின்ற—தமிழ்மக்களின் பெருமையே காரணமாகும். வாழ்வாங்கு வாழ்ந்த தமிழ் மக்களை நாம் மறவாது போற்றுதல் வேண்டும். அவ்வாறு போற்றுவதால் நம்மை நாமே உயர்த்திக் கொண்ட வர்களாவோம். இலைமறை காய்போல் இருக்கும் சில தமிழ்ப் பெருமக்களின் வாழ்க்கையில் நடந்த

சில நிகழ்ச்சிகளையேனும் நாம் ஆராய்ந்து அறிந்து போற்றுதல் வேண்டும். இவ்வாறு ஆங்கில நாட்டு மக்கள் தங்கள் நாட்டில் நடைபெற்ற சிறு நிகழ்ச்சியையும் உலகினர் அறியச்செய்து தங்களுக்குப் பெருமை தேடிக் கொள்ளுகின்றார்கள். நம்மிற் பலர் "காயமே இது பொய்யடா" என்று சொல்லிக் கொண்டு தங்கள் வாழ்க்கையையும் கவனியாமல் தற்காலத்தில் சோம்பித் திரிகின்றனர்.

இதுவரையில் தமிழர் வாழ்க்கையில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளைக் கவனித்தோம்; இனி மற்றொரு தமிழ் மகனாரின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கவனிப்போம் :

சோழவள நாட்டிலே, மதலம்பேடு என்னும் ஊரிலே, கணக்கர் மரபிலே இன்றைக்குச் சற்றேறத் தாழ இருநூற்று முப்பதாண்டுகளுக்கு முன்னர் நல்லாப் பிள்ளை என்பவர் பிறந்தார். அவர் தந்தையாரின் பெயர் அரங்கப் பிள்ளை என்பது; தாயாரின் பெயர் பெருந்தேவி என்பர். இவர்கள் தம் மகனுருக்கு 'நல்லான்' என்று வைத்த பெயர் பிற்காலத்தில் "நல்லாப் பிள்ளை" என்றாயிற்று !

நல்லாப் பிள்ளையின் தந்தையார் கொஞ்சம் தமிழறிவுள்ளவர். அவர் கணக்கர் மரபில் தோன்றினவராயினும் கணக்குத்தொழிலை மேற்கொண்டவரல்லர்; மதலம் பேட்டுக்குப் பக்கத்தில் இருந்த சிறுவூர் என்னும் பதியில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தை வைத்துக் காலங் கழித்து வந்தார். ஆனால், நாளடைவில் அவ்வூரில் பள்ளிக்கூடத்

தொழிலில் வருவாய் குறையத் தலைப்பட்டது. ஆகவே, அவர், தம்தொழிலை வேறு எங்கேனும் சென்று நடத்துவதென்று தீர்மானித்தார்.

அப்போது மதலம் பேட்டில் வீரண்ணதேவர் என்னும் நல்லார் ஒருவரிருந்தார். அவர், கல்வி கேள்விகளில் சிறந்தவர் ; இலக்கண இலங்கியங் களிலே வல்லவர் ; விரைந்து கவிபாடுதலிலும் தேர்ந்தவர் ; யாப்பிலக்கணத்திலும் நல்ல பயிற்சி பெற்றவர். தாளாண்மை மிக்க வேளாண் தொழிலை மேற்கொண்டவர். ஆயினும், தனவந்த ரல்லர். அவர் அரங்கப் பிள்ளையின் வாழ்க்கை நிலையை உணர்ந்தார். உடனே அவர் அரங்கப் பிள்ளையை அவருடைய குடும்பத்தினருடன் அழைத்துத் தம் ஊரில் இருக்கச்செய்து வேண்டிய உதவியையும் அளித்தார். பின்னர் வீரண்ண தேவரின் ஆதரவின் கீழ் மதலம்பேட்டில் அரங்கப் பிள்ளை அவர்கள் தம் திண்ணைப் பள்ளிக்கூடத் தொழிலை நடத்தி வரலானுர்கள். நாளடைவில் அத்தொழில் அவருக்கு வேண்டுமளவுக்குப் பலனைக் கொடுத்தது.

அரங்கப்பிள்ளை மதலம் பேட்டிற்கு வந்த நான்கு மாதங்களுக்குப் பிறகு கருப்பமுற்றிருந்த அவர் மனைவியார் ஓர் ஆண் குழந்தையைப் பெற் றெடுத்தார். அந்தக் குழந்தைதான் பிற்காலத் தில் நல்லாப்பிள்ளை என்னும் பெயருடன் வில்லி பாரதத்தை விரிவுறப் பாடி "அதை நல்லாப்பிள்ளை பாரதம்" என்று எல்லோரும் சொல்லும்படி புகழ் பெற்றதாகும்.

குழந்தை பிறந்து மூன்று ஆண்டுகளாயின. தாயார் நோய் வாய்ப்பட்டு இறந்து போனார். தந்தை தம் திண்ணைப் பள்ளிக்கூடத் தொழிலுடன் தம் அரு மருந்தன்ன ஆண் மகனை வீரண்ண தேவரின் உதவியுடன் வளர்த்து வரலானார். பின்னும் இரண்டாண்டுகள் சென்றன. அரங்கப் பிள்ளை அவர்களும் நோயுற்று இறந்தார். குழந் தையாகிய நல்லானை, வீரண்ண தேவரும், அவர் மனைவியாரும் தங்கள் குழந்தையாகவே கருதி வளர்த்து வந்தனர்.

வீரண்ணதேவர், குழந்தை நல்லானுக்குத் தாமே கல்வி கற்பித்து வந்தார். தாய் தந்தையர் களைத் தங்கள் இளம்பருவத்தில் இழந்த குழந்தை களிற் சிலர் அறிவுள்ளவர்களாய் இருப்பதைப் போலவே குழந்தை நல்லானும் அறிவுள்ளவனாய் விளங்கினான். கல்வியில் அவன் வளர்பிறை போல விருத்தி அடைந்தான். வளர்த்துவானேன். நல்லான் தன்னுடைய பதினெட்டாவது வயதை அடைவதற்கு முன்னரே இலக்கணம், இலக்கியம் முதலியவைகளில் தேர்ந்து, விரைந்து கவிபாடுவதி லும் வல்லவனாயினான் !

வீரண்ணதேவர் வில்லி பாரதத்தில் விருப் புள்ளவர். வில்லி பாரதத்தில் "கிருஷ்ணன் தூது" என்னும் பகுதியை அவரைப்போலப் பிரசங்கிக்க வல்லவர் அவர் காலத்தில் வேறொருவரும் இருந்த தில்லை. வீரண்ணதேவர் பிரசங்கம் நிகழ்த்தும் போது பாட்டுக்களை நல்லான் என்னும் நல்லாப் பிள்ளை படித்து வருவார்.

ஒரு சமயம், பக்கத்து ஊர் ஒன்றில், தக்கார் ஒருவர் கிருஷ்ணன் தூது என்னும் பகுதியைப் பிரசங்கிக்குமாறு வீரண்ண தேவரைக் கேட்டுக் கொண்டார்; அவரும் ஒப்புக்கொண்டார். நாளும் நேரமும் குறிப்பிடப்பட்டன. குறிப்பிடப்பட்ட தினத்திற்கு முன்னுள் வீரண்ண தேவருக்குக் கடுங் காய்ச்சல் கண்டது. அந்தக் காய்ச்சல் மறுநாளும் அவரை விடவில்லை. வீரண்ண தேவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பிரசங்கத்திற் குரிய நேரமும் நெருங்கியது. ''பெருமக்கள் சிலரும், பிற மக்கள் பலரும் பிரசங்கத்தைக் கேட்பதற்கு வந்திருக்கிறுர்கள்'' என்று அப்பொழுது அழைத் துப்போக அங்கு வந்த ஒருவர் வீரண்ண தேவரிடம் கூறினர். தம்மால் அன்று பிரசங்கம் செய்ய முடியாமைக்குரிய தம் நிலைமையை வீரண்ணதேவர் வந்தவரிடம் விளக்கமாகக் கூறினர். ''ஐந்துமைல் தூரத்திற்கு அப்பாலிருந்தும் பிரசங்கத்தைக் கேட் பதற்காகப் பலர் வந்திருக்கிறுர்கள். பிரசங்கமில்லை என்ருல் அவர்கள் மனம் சலித்துப்போய் விடுமே! தாங்கள் வராவிடினும் வேறு எவரையாவது ஒரு வரை அனுப்பிவையுங்கள், பிரசங்கமென்று ஒன்று நடை பெற்ருல் போதும்'' என்று வந்தவர் உரைத்தார். இந்தத் தரும சங்கடமான நிலைமை யில் என்னசெய்வதென்று தோன்ருமல் வீரண்ண தேவர் கவலையுற்ருர். அவர் கவலைப்படுவதை அறிந்த நல்லாப்பிள்ளை அவரை நோக்கி, '' ஏதோ பிரசங்கமென்று ஒன்றிருந்தால் போதும் என்று வந்தவர் சொல்கின்ருர். தாங்கள் எனக்கு உத்தர

வளித்தால் யான் சென்று ஒருவாறு காரியத்தை நிறைவேற்றி வருகிறேன்'' என்றுரைத்தார்.

இவ்வாறு நல்லாப்பிள்ளை அவர்கள் கூறிய வார்த்தை வழுக்கிய நிலத்தில் நொண்டி ஒருவனுக்குக் கிடைத்த ஊன்றுகோல் போல வீரண்ண தேவருக்குத் தோன்றி மகிழ்ச்சியை அளித்தது. ஆகவே, அவர் நல்லாப்பிள்ளையை நோக்கி, "உன் கல்வித் திறமையில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆயினும், நீ பிரசங்கம் செய்து இதுகாறும் அதிற் பழக்கம் பெறவில்லையே. இருப்பினும் உனக்கு உன் திறமையில் நம்பிக்கையும், தைரியமும் இருக்குமாஞல் நீ உன் விருப்பப்படி சென்று பிரசங்கத்தை நிகழ்த்தி வரலாம்'' என்று சொன்னுர்.

பின்னர், நல்லாப்பிள்ளை பெரு மகிழ்ச்சியுடன் நல்லுடைகளை உடுத்துக்கொண்டு, கையில் வில்லிபாரத ஏட்டுச் சுவடியை எடுத்துக் கொண்டு, வீரண்ணதேவரின் ஆசியுடனும், அனுமதியுடனும் அழைக்க வந்தவருடன் பிரசங்கம் நடைபெற வேண்டிய இடத்திற்குச் சென்ருர். விஷயம் விளக்கப்பட்டவுடன் குழுமி இருந்த கூட்டத்தினரிடையில் சிறிது பரபரப்பு ஏற்பட்டு அடங்கியது. "பூவுடன் கூடிய நாரிலும் சிறிது மணமிருக்கத்தான் செய்யும்'' என்று கூட்டத்தினர் அடங்கி இருந்தனர்.

பின்னர், நல்லாப் பிள்ளை அவை யடக்கமாகச் சில வார்த்தைகள் கூறிவிட்டு வில்லி பாரதத்தில் காணப்படும் கிருஷ்ணன் தூதுப் பகுதியைப் பிரசங்கிக்கலாஞர். பிரசங்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர்,

அரை நாழிகை நேரத்திற்குள், கேட்போர் அனைவரும் தங்கள் நிலையை மறந்து பிரசங்கியாரின் வயப்பட்டு விட்டனர். உண்மையில் அவர்கள் பாரத காலத்திற்கே சென்று விட்டார்கள். "வீரண்ண தேவரைப் பார்க்கிலும் திறம்பட கிருஷ்ணன் தூதுப் பகுதியைப் பிரசங்கிக்க வல்லார் எவருமில்லை" என்னும் வார்த்தை பொய்த்துப் போயிற்று! "நல்லாப் பிள்ளையைப்போல் இனி எவராலும் இப்படிப் பிரசங்கிக்க முடியாது" என்று குழுமி இருந்தவர்களிற் பலர் தங்களுக்குள் கூறிக் கொண்டனர். நேரம் போவதே தெரியவில்லை. கிழக்கு வெளுத்து விட்டது. சேவலும் கூவியது. அதுவரையில் பத்தே பத்துப்பாடல்கள்தாம் பிரசங்கிக்கப் பெற்றன! இவற்றுக்கிடையில் எத்தனை உவமானப் பாடல்கள்! எத்தனைக் கதைகள்! இவைகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து சர்க்கரைப்பந்தரில் தேன்மாரி பெய்ததுபோல் கேட்போருக்கு இன்பத்தை அளித்து அவர்களைப் பரவசப்படுத்தின. சூரியன் புறப்படுவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்னர்தான் பிரசங்கம் நிறுத்தப்பட்டது. பதினெட்டு ஆண்டுகளே நிறையப்பெற்ற நல்லாப் பிள்ளை அவர்கள், அவரைக் காண்போருக்கு அறிவுக் களஞ்சியமாகத் தோன்றினர்கள். அறிவில் இவர் "இளம் பூரணர்" என்று ஆங்கிருந்த மிகுதியும் கற்றோர் இரண்டொருவர் கூறினர். "தேர்ந்த கல்வித் திறனும் சொல்லாற்றலும் மிக்க இவர் பல்லாண்டு வாழ வேண்டு"மென்று எல்லோரும் கூறினர். வாரத்தில் இரண்டு முறையேனும்

தொடர்ந்து பிரசங்கம் செய்யுமாறு எல்லோரும் நல்லாப் பிள்ளை அவர்களை வேண்டிக் கொண்டனர். தம் ஆசிரியரின் விருப்பம் எப்படியோ அப்படித் தான் தம்மால் நடக்க முடியும் என்று நல்லாப் பிள்ளை அவர்கள் கூறினார்கள்.

நல்லாப் பிள்ளை மதலம் பேட்டுக்குச் செல்லு முன்னரே அங்குச் சென்ற சிலர், பிள்ளை அவர் களின் அளவற்ற பிரசங்கிக்கும் திறனைப்பற்றி வீரண்ண தேவரிடம் விளக்கமாகக்கூறி, "நல்லாப் பிள்ளை அவர்கள் வாரத்தில் இரண்டு முறையே னும் பிரசங்கிக்குமாறு தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொண் டனர்.

அவர்கள் கூறிய வார்த்தைகளைக் கேட்ட ஆசிரியர் வீரண்ண தேவர், "நல்லான் தன்னைத் தானே, இனி, காப்பாற்றிக் கொள்ளுவான்" என்று தமக்குள் எண்ணி மகிழ்ச்சியுற்று நல்லாப் பிள்ளை வந்தவுடன் அவரை நோக்கி, "யான் உன் கல்வி வளர்ச்சிக்காக உழைத்த உழைப்பு இன்று தான் புகழாகிய பயனை எனக்களித்தது" என்று சொல்லி அவரை அன்பு தோன்ற கட்டித் தழுவிக் கொண்டார்,

"எல்லாம் தங்கள் திருவருளின் பயனன்றி வேறொன்றுமில்லை" என்று கூறி நல்லாப்பிள்ளை அவர்கள், தம் தந்தை போன்ற ஆசிரியர் வீரண்ண தேவரை, வணங்கினார்.

பின்னர், தேவரவர்களின் கட்டளைக்குட்பட்டும், பொது மக்களின் வேண்டுகோளுக் கிணங்கியும்

நல்லாப்பிள்ளை அவர்கள் கிருஷ்ணன் தூதுப் பகுதியுடன் வில்லிபாரதம் முழுவதையும் இரண்டாண்டில் பிரசங்கித்து முடித்தார். பிரசங்க காலத்தின் இடையிலும், இறுதியிலும் தமக்குப் பரிசாகக் கிடைத்த பொருள்களை யெல்லாம் நல்லாப் பிள்ளை அவர்கள் தேவரிடமே சேர்ப்பித்தார்கள். பிரசங்கம் நடைபெற்ற இரண்டாண்டுகளுக்கிடையில் நல்லாப்பிள்ளையின் கீர்த்தி பல காவத தூரம் பரவியது. மக்கள் திரள் திரளாக வந்து வெல்லத்தை மொய்த்துக் கொள்ளும் ஈக்களைப்போல நல்லாப் பிள்ளை அவர்களைச் சூழ்ந்திருந்து அவர் வாய்மொழியைக்கேட்டு மகிழ்ந்தார்கள். நாளடைவில் பிள்ளை அவர்கள் வெகு தூரத்தில் உள்ள ஊர்களுக்கும் சென்று சொற்பொழிவாற்றி வந்தார்கள்.

ஒருமுறை நல்லாப் பிள்ளை, வில்லி பாரதம் முழுவதையும் முதலிலிருந்து இறுதிவரையில் இரண்டாண்டு காலம், பிரசங்கம் செய்வதற்கு ஒப்புக்கொண்டு மதலம்பேட்டிலிருந்து ஐம்பது மைல் தூரத்திற்கு அப்பாலிருந்த பொன்னுறு என்னும் கிராமத்திற்கு வீரண்ணதேவரிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார். பொன்னுற்றில் அவர் கிராமத் தலைவரின் ஆதரவின் கீழ் தம்முடைய பிரசங்கத் தொழிலை நடத்திக்கொண்டிருந்தார். ஆறுமாத காலமாயிற்று. அதுவரையில், வருவார் போவார் மூலம் வீரண்ண தேவருக்கும், நல்லாப் பிள்ளை அவர்களுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருந்தது. திடீரென்று வீரண்ண

தேவரிடமிருந்து கடிதம் வராமல் நின்றது, நல்லாப் பிள்ளை கவலையுற்றார்! பின்னும் மூன்று திங்கள் சென்றன, அவர் தற்காலிகமாகப் பிரசங்கத்தை நிறுத்திக்கொண்டு மதலம்பேட்டுக்குச் சென்றார். சென்றவுடன், அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அறிந்த நல்லாப் பிள்ளை, தம் பக்கத்தில் பேரிடி விழப்பெற்றவரைப் போலக் கதிகலங்கினார்.

"வீரண்ண தேவரும், அவர் மனைவியாரும் ஒருவர்பின் ஒருவராக நான்கே நாட்களில் வாந்திபேதி கண்டு மடிந்துபோயினர். அவர்கள் மகளான பத்து வயது நிரம்பிய வீரம்மாள் என்னும் பெயருள்ள பெண்ணை யாரோ ஒரு கிழவி, புது ஊர் என்னும் பதியிலிருப்பவள், வளர்ப்பதற்காக அழைத்துப் போயினாள்" என்னும் செய்தி நல்லாப் பிள்ளை அவர்களின் மனத்தை அனலிடைப்பட்ட மெழுகென உருக்கியது. தம் தங்கையெனத் தாம் மதித்துப் போற்றிய வீரம்மாள் புது ஊருக்குப் போய்விட்டாள் என்பதை அறிந்த அவர் பத்து மைல் தொலைவில் இருந்த புது ஊருக்கு வீரம்மாளைப் பார்க்கச் சென்றார். அந்த ஊரில் எந்த இடத்திலும் வீரம்மாளைக் காணோம். அன்றியும் வீரண்ண தேவரின் உறவினர் எவருமே அந்த ஊரில் இல்லை. இன்னும் சில ஊர்களில் அவர் முயன்று பார்த்தார். அவர் எண்ணம் நிறைவேறவில்லை. வீரண்ண தேவரின் உறவினர் சிலர் இருந்த ஊர்களுக்கும் சென்றார்; அங்கெல்லாம் வீரம்மாள் இல்லவே இல்லை. "வீரம்மாளை எங்கு,

என்று காண்போம்'' என்ற கவலையுடன் பொன்னூற்றுக்குச் சென்று நல்லாப்பிள்ளை அவர்கள், ஒப்பந்தப்படி, பிரசங்கமாகிய தம் கடமையை நிறைவேற்றலானார்: இரண்டாண்டுகள் சென்றன. வில்லிபாரதப் பிரசங்கம் முடிவு பெற்றது. பின்னர், பல ஊர்களிலிருந்தும் பிரசங்கம் செய்வதற்காக அவருக்கு அழைப்பு வந்துகொண்டிருந்தது. முடிந்த வரையில் பிரசங்கத் தொழிலை அவர் மேற்கொண்டார்; ஓரளவுக்குக் கையில் பொருள் சேர்ந்தது. கல்வியும், பொருளும், புகழும் சேர்ந்த பிறகு, முன்பின் அறிமுகமில்லாத உறவினர் சிலர், தங்கள் பெண்ணை, பிள்ளை அவர்களுக்குத் திருமணம் செய்விக்க முன்வந்தனர்! வீரம்மாளைப் பற்றிய கவலையில் ஆழ்ந்திருந்த பிள்ளை அவர்கள் தம் திருமணத்தில் கருத்தைச் செலுத்தவில்லை. பின்னும் ஐந்தாண்டுகள் சென்றன.

ஒரு முறை, மதலம்பேட்டுக்கு எழுபதுமைல் தொலைவில் இருந்த புத்தூர் என்னும் பதியில் வாழ்ந்த பழனிப்பிள்ளை என்பவரின் அழைப்பிற்கிணங்கி அவர் இல்லம் சேர்ந்து பிள்ளை அவர்கள் வில்லிபாரதத்தை, ஓர் ஆண்டு காலத்திற்குள் முடிப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டு, மாலை நேரத்தில் பிரசங்கம் செய்து வரலானார். ஒருநாள் பிரசங்கம் முடிந்தவுடன் ஒரு கிழவி அவரை நெருங்கி, "வீரண்ணதேவரின் மகள் வீரம்மாள் தங்களைப் பார்க்க விரும்புகிறாள்'' என்று சொன்னாள்! கிழவியின் வார்த்தை, பிள்ளை அவர்களின் மனத்தில்,

ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் ஒருங்கே விளை வித்தன.

"எங்கே வீரம்மாள் ? எங்கே வீரம்மாள் ?" என்று ஆர்வத்துடன் கேட்டார் நல்லாப்பிள்ளை

"என்னுடன் வந்தால் நீங்கள் வீரம்மாளைக் காணலாம்" என்று கிழவி கூறினாள்.

வீரம்மாளைக் காணவேண்டுமென்னும் ஆவலி னால், பார்ப்பவர்கள் ஏதேனும் நினைப்பார்களே என்றும் எண்ணாமல், ஒருவரிடத்திலும் ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல், நல்லாப்பிள்ளை அவர்கள் கிழவியுடன் சென்றார்கள். கிழவி, அவ்வூ ரின் ஒரு கோடியில் இருந்த கூரைவேயப்பட்ட ஒரு வீட்டிற்குள் பிள்ளை அவர்களை அழைத்துச் சென் றாள். வீட்டிற்குள் சென்றவுடன் சாதாரண உடையுடனிருந்த ஒரு பெண், சுமார் பதினேழு வயதென மதிக்கத்தகுந்தவள், நல்லாப்பிள்ளையை நோக்கி, "அண்ணா, வாருங்கள்" என்று சொல்லி அதற்குமேல் பேச முடியாதவளாய்த் தேம்பித் தேம்பி அழலானாள்.

நல்லாப்பிள்ளை, வீரம்மாளை ஆறு ஆண்டுக ளுக்கு முன்னர் பார்த்தவர். இருந்தாலும் அவள் முகத்தோற்றம், குரலோசை முதலியன அடியோடு மாறிவிடவில்லை. அவள் வீரண்ணதேவரின் மகள் வீரம்மாள்தான் என்று நல்லாப்பிள்ளை அவர்கள் நிச்சயமாக உணர்ந்து கொண்டார்கள். வீரம்மாள் அழுவதைக் கண்டவுடன் நல்லாப்பிள்ளையும் அழுது விட்டார். கிழவி, இருவருக்கும் தேறுதல் கூறிக் கொண்டே ஒரு மணையை எடுத்து நல்லாப்பிள்ளை

யின் எதிரில், தரையின் மீது வைத்து அதன் மீது அவரை உட்காரச் சொன்னாள்.

பிள்ளை அவர்கள் உட்கார்ந்துகொண்டு, வீரம் மாளையும் தம் எதிரில் உட்காரச்செய்து, அவளுக்கு ஆறுதல் மொழிகள் பல கூறிப் பின்னர் தாம் அவளைத் தேடித் தேடி அலுத்துப்போன வரலாற்றைச் சொல்லிப்பிறகு அவள் அங்கு வந்துள்ளமைக் குரிய காரணத்தை உரைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

உடனே வீரம்மாள் பிள்ளை அவர்களை நோக்கி, "அண்ணா! நான் இங்கு வந்த வரலாறு சுருக்கமானதே. தாங்கள் கேள்விப்பட்டபடியே, என் தாயாரும் தந்தையாரும் நான்கு தினங்களுக்குள் ஒருவர்பின் ஒருவராக இறந்தமை உண்மைதான். என் தந்தையார் இறந்தவுடன் கடன்காரர்கள் எங்களுக்கிருந்த சிறிது சொத்தையும் தங்கள் வயப் படுத்திக்கொண்டார்கள். உறவினர் எவரும் உதவ முன்வரவில்லை. இந்த அம்மையார் எனக்கு ஒரு வகையில் பாட்டியார் முறையுள்ளவர். இவர், தற் செயலாக என் தந்தையாரின் மரணத்தின்போது நம் வீட்டிற்கு வந்திருந்தார். இவருடன் நான் ஒரு மாதம் வரையில், கடன்காரர்கள் நம் வீட்டைக் கைக்கொள்ளும் வரையில், மதலம்பேட்டில் இருந்தேன். இதற்கிடையில், நான் சொல்லியபடி, இந்தப்பாட்டியார் பொன்னுற்றுக்கு வந்த இரண்டு மூன்றுபேரிடம் எங்கள் நிலைமையைப் பற்றித் தங்களிடம் தெரிவிக்குமாறு கூறினார். தங்களிடமிருந்து பதில் வரவில்லை. மன்னிக்கவேண்டும். தாங்கள்

எங்களைப்பற்றிக் கவலை கொள்ளவில்லைபோலும் என்று நாங்கள் அறியாமை காரணமாகத் தங்களைப் பற்றித் தவருகக் கருதிக்கொண்டு இங்கு வந்து சேர்ந்தோம். இந்த என் பாட்டியாருக்கு மக்கள் ஒருவருமில்லை. இவருக்கு அரைவயிற்றுச் சாப் பாட்டுக்குப் போதுமான அளவுக்கு நெல் வரக் கூடிய விளைநிலம் இருக்கிறது. அதைக்கொண்டு நாங்கள் ஒருவாறு ஏழைகளாகவே காலங்கழித்து வருகிறோம். இதுதான் நான் தங்களைப் பிரிந்த பிறகு நிகழ்ந்த வரலாறு'' என்று கண் கலக் கத்துடன் கூறினுள்.

வீரம்மாளுடைய வார்த்தை நல்லாப்பிள்ளையின் மனத்தை கலக்கியது. அவர் வீரம்மாளைப் பார்த்து, "தங்காய், நான் பொன்ஞற்றில் இருக்கையில் எவரும் வந்து உன்னுடைய நிலைமையைப் பற்றி என்னிடம் கூறவில்லை. போனது போகட்டும். இனிமேல் நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். உன்னை, என் உடன் பிறந்த தங்கையிலும் மேலாக நான் பாதுகாக்கின்றேன். இதை நான் செய்யா விடில் நன்றிமறந்த கொடியவனுவேன்,'' என்று கூறினர்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் வீரம்மாள் இறந்த தன் தாயும் தந்தையும் உயிருடன் வரப் பெற்றவளைப் போல மகிழ்ச்சி அடைந்தாள்.

அப்போது கிழவி, பிள்ளை அவர்களைப் பார்த்து, "நன்றி மறவாத தங்களைப் போன்றவரே கண் கண்ட தெய்வமாவர்'' எனறுரைத்தாள்.

பின்னர், பிள்ளை அவர்கள் கிழவியிடத்திலும், வீரம்மாளிடத்திலும் விடை பெற்றுக் கொண்டு பழனிப்பிள்ளையின் வீடு சென்று வீரம்மாளின் வரலாற்றைப் பழனிப்பிள்ளையினிடம் விவரமாகக் கூறினுர். உண்மை அறிந்த பழனிப் பிள்ளை அவர்களும் வீரம்மாளிடம் இரக்கங் காட்டத் தொடங்கினுர். அன்று முதல் பழனிப் பிள்ளை அவர்களும், நல்லாப் பிள்ளை அவர்களும் வீரம்மாளை அருமை பெருமையுடன் கவனித்து வரலானுர்கள். உண்மையை அறிந்த ஊராரும் நல்லாப் பிள்ளை அவர்களின் நன்றி மிகுந்த குணத்திற்காக அவரைக் கொண்டாடினர்.

நல்லாப் பிள்ளை விரைவில் வீரம்மாளுக்குத் திருமணம் நடத்திவிட வேண்டுமெனத் தீர்மானித்தார். பிறகு அவர், தம் தொழிலுக்கிடையில் வீரம்மாளின் மரபுக்கும், குணத்திற்கும் ஏற்ற கல்வி கற்ற வாலிபனெருவனைத் தேடி அவனுக்கு வீரம்மாளைத் திருமணம் செய்து வைத்தார். அந்த வகையில் பழனிப் பிள்ளை அவர்களே முன்னிருந்து திருமணச் செலவை ஏற்றுக் கொண்டார். திருமணம், தனவந்தர்களின் வீட்டுத் திருமணம் போலவே சிறப்புற நடைபெற்றது. நல்லாப் பிள்ளை அவர்களும் மணமகளுக்குரிய நகை முதலியவைகளுக்காக, ஐஞ்ஞூறு வராகன்களுக்கும் அதிகமாகவே செலவிட்டார். மணமகன் கல்வியுடன், வாழ்வதற்கு வேண்டிய அளவுக்குச் செல்வமும் முயற்சியும் உள்ளவனுய் இருந்தான். "வீரண்ண தேவர் இருந்து செய்தால்கூட இந்தக் கலியாணத்தை இவ்வளவு விமரி

சையாகச் செய்திருக்கமாட்டார்'' என்று வீரண்ண தேவரை அறிந்தோர் கூறினர்.

இரண்டு திங்கள் சென்றன. மணமகனும், மணமகளும் மகிழ்ச்சியுடன் வாழ்வதைக் கண்ட நல்லாப் பிள்ளை அடைந்த மகிழ்ச்சிக்கோர் அளவே இல்லை. ஆண்டில் இளையவராயினும், நல்லாப் பிள்ளை அவர்கள், அறுபது ஆண்டுகளைக் கடந்த ஓர் அறிஞரைப் போல வீரம்மாள் விஷயத்தில் நடந்து கொண்டதைப் பற்றிப் பொதுமக்கள் பேசிப் பேசி அவருடைய நற்குணத்திற்காக அவரைக் கொண்டாடினார்கள்.

நல்லாப் பிள்ளையைப் போன்ற நன்றி மறவா நன்மக்கள் இருக்கும் நாட்டில், எல்லா நலன்களும் பெருகும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய மக்களே நாட்டில் என்றென்றும் பெருகவேண்டும்.

பின்னர், இரண்டாண்டுகள் சென்றன. நல்
லாப் பிள்ளை அவர்களும் திருமணம் செ
கொண்டார்கள். அவர் திருமணம் மிகமிகச்
புடன் நடை பெற்றதென்பதை நாம் சொல்லவே
டியதில்லை.

செல்வமும் வசதியும் ஏற்பட்ட பின்
பிள்ளை அவர்கள், வில்லி பாரதத்தைப் செ
மாகப் பாடி, அதை, எல்லோரும் "நல்லாப்
பாரதம்'' என்று சொல்லத் தாம் புகழுடன் வ
கொண்டிருந்தார்கள்.

★